Registered as a Newspaper. பக்கங்கள்: பத்து விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 07 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 25 (22.06.2006) வியாழக்கிழமை இதழ் 264

# இனிமேல் நடைபெறும் தாக்குதல்கள் யுத்தப் பிரகடனமாகவே கருதப்படும்!

## பதிலடி கொடுப்போம் என்றும் புலிகள் எச்சரிக்கை



கிளிநொச்சி

தமிழர் பிரதேசங்களின்மீது பிரகடனப்படுத்தப்படாத போர் ஒன்றை நடத்தும் அரச படைகளின் தாக்குதல்கள் இனிமேலும் தொடர்ந்தால் - யுத்தப் பிரகடனமாகக் கருதி பதில் தாக்குதலில் இறங்க நேரிடும் என நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் விடுதலைப் புலிகள் கண்டிப்புடன் தெரிவித்துள்ளனர்.

நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோதே நோர்வே தூதுவர் பிரட்ஸ்கரிடம் புலிகள் இந்தக் கருத்தை வலியுறுத்தித் தெரிவித்தனர்.

நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்:- (10 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு

யாழ்.கல்வியங்காட்டைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கருணா குழுவினரால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

வர்த்தகரான நிர்மலகுமாரன் (வயது55) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர். நிர்மலகுமாரனிடம் துணை இராணுவக் குழுவினரான கருணா குழுவினர் கட்டாய நிதி கேட்டதாகவும் அவர் நிதியை வழங்க மறுத்ததால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மட்டக்களப்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு

மட்டக்களப்பு- ஊறணி இராணுவ முகாமுக்கு அருகே 24வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு- ஊறணி இராணுவ முகாம் அருகே ஜெயராஜ் சுதாரட்ணம் (வயது 24) என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

## அரசு-புலிகளுக்கான பதில் 29 ஆம் திகதி அறிவிப்பு!


கிளிநொச்சி

இலங்கை அரசும் - புலிகளும் நோர்வே அரசுக்கு அனுப்பிய கடிதத்துக்கான பதில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெளியிடப்படும் என்று இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை - இலங்கைக்கான [illegible]கர் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ஹான்ஸ் பிரட்ஸ்கர் -

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பினருக்கும் ஜூன் 8 ஆம் திகதி நோர்வே அரசு அனுப்பிய கடிதத்துக்கு நேற்று முன்தினம்



# இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு- ஊறணி இராணுவ முகாமுக்கு அருகே 24வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு- ஊறணி இராணுவ முகாம் அருகே ஜெயராஜ் சுதாரட்ணம் (வயது 24) என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாத (10 ஆம் பக்கம் பார்க்க)

திகதி வெளியிடப்படும் என்று இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை - இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்

பெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ஹான்ஸ் பிரட்ஸ்கர் -

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பினருக்கும் ஜூன் 8 ஆம் திகதி நோர்வே அரசு அனுப்பிய கடிதத்துக்கு நேற்று முன்தினம் விடுதலைப் (10 ஆம் பக்கம் பார்க்க)



# வட்டுக்கோட்டையில் மோதல்: இராணுவச் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம்—

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்து மானிப்பாய் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சில நிமிடங்கள் அந்தப்பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரியவருகிறது. (48, 43)

# கலிகையில் மோதல்; ராணுவ சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்—

வடமராட்சி - கலிகை சந்தியில் நேற்று மாலை படையினர்மீது மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 6.40 மணியளவில் கலிகைச் சந்தியில் உள்ள மினி முகாமுக்கு அருகில் நின்ற படையினர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதையடுத்து படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டதுடன் சுமார் 15 நிமிடங்கள் வரை மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த கோப்ரல் ரஞ்சித் மற்றும், முனசிங்க , பண்டார ஆகிய மூன்று படையினரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# வட கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்கு ஒருநிமிட மௌனம்

## நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு நாடாளுமன்றில் ஒரு நிமிட நேரம் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை மீண்டும் கூடியபோது வழமையான செயற்பாடுகளுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் இராணுவத்தாலும் துணை இராணுவக் குழுவினராலும் படுகொலை செய்யப்படுகின்ற தமிழ் மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

இதை சபாநாயகர் லொக்கு பண்டார ஏற்றுக்கொண்டார். வடக்கு-கிழக்கு நிலைமைகள் தொடர்பாக இரா.சம்பந்தன் உரையாற்றினார்.

இராணுவத்தினர் மீது இரா. சம்பந்தன் குற்றம்சாட்டியமைக்கு ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய (10 ஆம் பக்கம் பார்க்க)




யாழ்.குடாநாட்டின் நிலைமை தொடர்பாக நேரில் காண்பிக்க இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட தென்னிலங்கை பத்திரிகையாளர்கள் - நேற்று யாழ்.நகரில் கவசவாகனங்களுக்குள் இருந்து செய்தி சேகரித்த காட்சி. (படம்:- ஏபி)




# தோல்விக்குமப்பால் சில பதிவுகள்




கெய்சலேட்ரன்

FIFA 2006 இன் B பிரிவு ஆட்டங்களின் இறுதி ஆட்டம் பரகுவே எதிர் டிரினிடாட்டுபாகோ ஆட்டமாக அமைந்தது.

துரதிஷ்டவசமாக இந்த இரண்டு நாடுகளுக்குமே இந்த உலகக் கிண்ணப்போட்டிகளின் இறுதி ஆட்டமாகவும் இது அமைந்துவிட்டது. ஆட்டத்தின் முடிவு பரகுவேயிற்குச் சாதகமாக 2-0 என்று முடிந்தாலும் - அதில் ஒரு கோலைப்போட்டுக் கொடுத்தது டிரினிடாட் வீரர் சன்சோதான். இதன் பின்னர் 86 நிமிடத்தில் பரகு வேயின் கியூவாஸ் போட்ட கோலுடன் டிரினிடாட்டின் கனவுகள் கலைந் தது.





பரகுவேயும் கூட நான்குமுறை உலகக்கிண்ண இறுதி ஆட்டங்களுக்குத் தகுதிபெற்றபோதும் முதல் சுற்றிலேயே அடுத்த கட்டத்திற்கு செல்லும் வாய்ப்பை இழந்து நின்றது இதுவே முதல் முறையாகும். அதோடு முன்னர் பங்குகொண்ட சுற்றுப் போட்டிகளிலும் ஒரே ஒரு ஆட்டத்திலேயே பரகுவேயால் வெற்றிபெற முடிந்திருந்தது.

2006 இலும் அதுவே நடந்தது. இம்முறை முதல் சுற்றிலேயே அடுத்த கட்டத்திற்குத் தகுதிபெறத் தவறிய மூன்றாவது அணியாக டிரினிடாட் டுபாகோ அதை விளக்குகிறது.

இதற்கு முன்னதாக ஜவரிகோஸ்டும் - ரோகோவும் வெளியேறின. இம் மூன்று நாடுகளும் FIFA 2006 இல்தான் முதன்முதலாக உலகக் கிண்ண இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தன. மேலும் லாறாவின் தேசத்தவர் தமது மூன்று ஆட்டங்களிலும் ஒரு கோல் கூடப் பெறமுடியாமற் போனமை மனவருத்தமான செய்தி தான்.

இந்த வகையில் கூட இவர்கள் உலகக்கிண்ண வரலாற்றில் எட்டாவது நாடாக இணைந்து கொள்கிறார்கள். பதின்மூன்று இலட்சம் மக்கள் தொகையை மட்டும் கொண்ட குட்டி நாடொன்று - உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றது ஒரு சாதனை.

முதல்சுற்றில் சுவீடனுடன் ஆட்டத்தைச் சமன்செய்தது மட்டுமன்றி, இங்கிலாந்துடன் பலமாக மோதியே தோல்வியைத் தழுவியது. என்பதும் கூட குறிப்பிடத்தக்க விடயங்களே.



திறமை வாய்ந்த வீரர்களைக் கொண்ட டிரினிடாட்டுபாகோ நாடு 2010 உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதிபெற வாழ்த்தி விடைகொடுப்போம்.

## இன்றைய ஆட்டங்கள்

| | |
|---|---|
| செக் குடியரசு - இத்தாலி | E பிரிவு (ஹம்பேர்க் 7.30) |
| கானா - ஐக்கிய அமெரிக்கா | E பிரிவு (நூரம்பேக் 7.30 ) |
| ஜப்பான் - பிரேசில் | F பிரிவு (டோர்ட்மன்ட் 12.30) |
| குரோஷியா - அவுஸ்ரேலியா | F பிரிவு (ஸ்ருட்காட் 12.30) |

# மீண்டும் காலனித்துவம்





ஜெச்சென்கிர்சன்

D பிரிவில் நேற்று மாலை மெக்ஸிக்கோ அணியை மயிரிழையில் வென்ற போத்துக்கல் அணி அடுத்த சுற்றுக்கு இந்தப் பிரிவிலிருந்து முதலாவதாகத் தெரிவானது.





82 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்த அரங்கில் ஆட்டம் தொடங்கி 6 ஆவது நிமிடமே முதலாவது கோலை அடித்து முன்னிலையை நிரூபித்தது போத்துக்கல்.

அந்த அணிவீரர் மனிச் முதலாவது கோலை அடித்து எதிர்பார்ப்பை உருவாக்கினார். இவரையடுத்து 24 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் சிமாவோ சத்ரோசாவுக்கு ஒரு பனால்டி வாய்ப்புக் கிடைத்தது.

ரபல் மர்குவஸின் கையில் பந்து பட்டதால் கிடைத்த பனால்டி வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்திக் கோலாக்கிக்கொண்டார்.

இந்த நிலையில் மெக்ஸிக்கோ அணி விடாமல் போராடி 29 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை அடித்தது. பொன்சேகா அடித்த இந்த கோலே முதலும் கடைசியுமாகவே இருந்தது. முதல் பாதி ஆட்டத்தில் 2:1 என்ற அடிப்படையில் முன்னிலைபெற்ற போர்த்துக்கல் அணிக்கு எதிராக மெக்ஸிக்கோ விடாப்பிடியாகக் கோல் அடிக்கமுயன்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காமல் போராட்டம் நடத்தின.

இதனால் கடைசிவரை இரு அணிகளாலும் கோல் போடமுடியாமல்போனது. அதேவேளை, 61 ஆவது நிமிடத்தில் மெக்ஸிக்கோ வீரர் பெரஸ் நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால் அரைமணிநேரம் 10 வீரர்களுடன் போராடிய மெக்ஸிக்கோ போர்த்துக்கல் அணியை கோல் அடிக்கவிடாமல் தற்காத்துக் கொண்டது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன்மூலம் D பிரிவில் பங்கேற்ற 3 போட்டிகளிலும் வெற்றி பெற்ற போர்த்துக்கல் அணி 9 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்ததுடன் அடுத்த சுற்றுக்கும் தெரிவானது.

அதேவேளை, ஒரு போட்டியில் வெற்றி பெற்று மற்றொன்றை சமநிலையில் முடித்த மெக்ஸிக்கோவும் இரண்டாம் சுற்றுக்குள் பிரவேசித்துள்ளது.

# இது சூடு பிடிக்கும் காலம்



கொலொன்

இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறும் அணிகள் மளமளவென்று வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பிரிவு B இற்கான இங்கிலாந்து எதிர் சுவீடன் ஆட்டம் 2 -2 என்று சமநிலையில் முடிவடைந்தது.

ஏலவே, பரகுவே தகுதி இழந்த நிலையில் ட்ரினிடாட் உள்நுழைய வேண்டுமாயின் பரகுவேயை வெல்லவேண்டும். சுவீடன் - இங்கிலாந்திடம் தோற்கவேண்டும். ஒன்றுமே நடைபெறவில்லை. சுவீடன், இங்கிலாந்து இரண்டும் சமதையான அணிகள். இரண்டும் இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறுகின்றன.

இதில் இங்கிலாந்து - சுவீடனுடன் வென்றால் அல்லது சமநிலையில் முடித்தால் இரண்டாம் சுற்றில் பிரிவு A யின் முதன்மை அணியான ஜேர்மனியைத் தவிர்த்து ஈக்குவடோரைச் சந்திக்கலாம்.

இங்கிலாந்தின் விருப்பப்படியே எல்லாம் நடந்தது. தற்போது இவர்கள் A பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற ஈக்குவடோரைச் சந்திப்பார்கள். அதேவேளை, இரண்டாம் சுற்றில் A பிரிவு ஜேர்மனியை B பிரிவு இரண்டாம் இடம்பெற்ற சுவீடன் சமாளித்தாகவேண்டும்.

இங்கிலாந்தின் ஜோகோல் - முப்பத்து நான்காவது நிமிடத்தில் ஒரு கோல்போட சுவீடனின் ஆல்பக் 51 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல்போட்டார். பின்னர் 85 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ஜெராட் ஒரு கோல்போட இறுதி ஒரு சில நிமிடங்கள் இருக்கும்போது லாக்சன் சுவீடனுக்காக கோல் ஒன்றுபோட 2-2 என்று ஆட்டம் முடிந்தது.

பொதுவாக நோக்கின் இங்கிலாந்து ஆட்டத்தில் முன்னேற்றம் இருந்தாலும் பின்னரைப் பகுதியில் தடுமாறியமை எரிக்சனுக்கு ரொம்ப எரிச்சலைக் கொடுத்தது. மேலும் காயமடைந்த ஓவன் மைதானத்தில் இருந்து காவிச்செல்லப் பட்டமை இன்னொரு பெரிய அதிர்ச்சி. அவர் முதன்மைப் பதினொரு பேரில் ஒருவர்.

இதேவேளை, சுவீடன் FIFA 2006 இன் முதல் ஆட்டத்தில் இருந்து நல்ல முன்னேற்றத்தையே காட்டி வந்திருக்கிறார்கள். அடுத்து வரும் கட்டங்கள் நொக் அவுட் என்ற வகையில் ஜேர்மனி மண்ணில் ஜேர்மனி அணியை இரண்டாம் சுற்றின் முதல் போட்டியில் சந்தித்து அடுத்த கட்டத்துக்குப் போகும் பெரும் சோதனையொன்று சுவீடனுக்கு இருக்கிறது.

இதேவேளை, தன் மண்ணில் இருந்து கிண்ணத்தை வேறொருவர் கைப்பற்ற ஜேர்மனி அனுமதிக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடி யாது.

எனவே ஊகங்களை விட்டுவிட்டு 24 ஆம் திகதி மியூனிச் மைதானத்தில் இருதரப்பும் சந்தித்துக்கொள்ளும்போது பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். மேலும் உலகக் கிண்ண வரலாற்றின் 2000 ஆவது கோல் சுவீடனின் மார்கஸ் ஆல்பெக் அடித்த கோலாக அமைந்தது இந்த ஆட்டத்தின் முக்கிய நிகழ்வாகும்.

# வன்முறைகளால் இடம்பெயர்ந்துள்ள அனைவரையும் பாதுகாக்கவேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை



கொழும்பு —

வன்முறைகளால் இடம்பெயர்ந்துள்ள அகதிகள் அனைவரையும் பாதுகாக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளதாவது-

கடந்த ஜனவரி முதல் 2 ஆயிரத்து 500 அகதிகள் தென்னிந்தியாவுக்கு வடக்கு - கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். கர்ப்பிணிப் பெண்களும், குழந்தைகளும் மிகவும் அச்சத்துடன் தங்களது பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய இடங்களிலிருந்து சிங்களவர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் அகதிகள் முகாமை நான் பார்வையிட்டேன். ஆயிரத்து 100 பேர் அகதிகளாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அங்குள்ள அகதிகளில் சிலர் மீண்டும் தங்களது வீடுகளுக்குத் திரும்ப விரும்புகின்றனர். அதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

பேசாலை மற்றும் மன்னாரில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டுள்ள அண்மைய தாக்குதல் மிகவும் கண்டனத்துக்குரியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே பேசாலையில் ஏற்பட்ட மோதல் குறித்து நாம் எதுவும் சொல்வதற்கில்லை.

ஏனெனில் அரச படைகள் நாட்டைப் பாதுகாக்கின்ற உரிமை உள்ளவர்கள். இருந்தபோதும் அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைக்கக் கூடாது. இருதரப்பும் அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

ஆனால் குறிப்பாக அரசாங்கம் தனது கடமையைச் செய்ய வேண்டும். ஏனெனில் இந்த நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குண்டு. தென்னிலங்கையிலிருந்து மடு தேவாலயத்துக்கு வருகை தரும் சிங்களவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளது எனத் தெரிவித்தார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் அமுல்படுத்த வேண்டும்!

## ஹெல உறுமய கோரிக்கை



கொழும்பு —

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கருத்தில் கொள்ளாது இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு இறைமையைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

இலங்கையில் மட்டுமல்ல ஜப்பான், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளிலும் விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

# நீர்கொழும்பில் குண்டுப்புரளி!

நீர்கொழும்பு —

நீர்கொழும்பில் பாடசாலைக்கு அருகில் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பரவிய வதந்தியால் நீர்கொழும்பு நகரெங்கும் பதற்றம் நிலவியது.

நீர்கொழும்பில் இயங்கும் பிரபல பாடசாலைக்கு அருகில் குண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடந்த திங்கட்கிழமை காலை நகரெங்கும் வதந்தி பரவியது.

இதையடுத்து நகரிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்ற பெற்றோர் தங்களின் பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் செல்வதற்கு முயன்றனர். இதனால் அங்கு பரபரப்பான நிலை காணப்பட்டது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஓ.டபிள்யூ.சில்வா - பொய்யான வதந்தி பரப்பப்பட்டுள்ளதாகவும், மக்கள் இதனால் பதற்றமடையாது பொறுமையுடன் இருக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

# துணை ஆயுதக் குழுவால் இளைஞர் ஒருவர் கடத்தல்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - நாசிவன்தீவில் இளைஞர் ஒருவர் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக்குழுவினரால் கடத்தப்பட்டார்.

நல்லதம்பி சுதாகரன் என்ற 31 வயதுடைய இளைஞரே கடத்தப்பட்டவராவார். இவரது வீட்டுக்கு கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணிக்குச் சென்ற துணை இராணுவக்குழுவினர் இவரைக் கடத்திச் சென்றனர்.

அவரது உறவினர் ஒருவருடைய வீடும் துணை இராணுவக்குழுவினராலும், இராணுவத்தினராலும் எரியூட்டி அழிக்கப்பட்டது.

இதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிவு ஏற்பட்டது.

இதேபகுதியில் மற்றொரு வீட்டினுள் புகுந்த துணை இராணுவக் குழுவினர் வீட்டை உடைத்துப் பெருமளவான பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

# இராணுவ தலைமையகத்துக்கான பஸ்சேவை இடைநிறுத்தப்பட்டது!

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

கொழும்பு —

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் படையினரின் பயணங்களுக்காக நடத்தப்பட்டு வந்த பஸ்சேவை பாதுகாப்புக் காரணங்களால் கடந்த திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டது.

இராணுவத்தினர் பயணிக்கும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்திருக்கும் தகவலுக்கமைய இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் இருந்து 40 கிலோமீற்றர் தூரத்துக்கு இந்த பஸ் சேவை நடத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து பனாகொட, களுத்துறை, ஹொரண, அவிசாவளை, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களுக்கு இந்த பஸ் சேவை நடைபெற்று வந்தது.

நாளாந்தம் அதிகாரிகள் மற்றும் படைவீரர்கள் என சுமார் ஆயிரம் பேர் தமது வீடுகளில் இருந்து கடமைக்குச் செல்லவும், மீண்டும் வீடுகளுக்குத் திரும்பவும் இந்தச் சேவையை பயன்படுத்தி வந்தனர்.

இந்தச் சேவை இடைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்துப் படையினருக்கும் இலவச பயண அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. (தே)

# சந்தேகத்துக்குரிய படகு கடற்படையிடம் பிடிபட்டது!

கொழும்பு —

நீர்கொழும்பு பகுதியில் தேடப்பட்டு வந்த ஆழ்கடல் மீன்பிடிப்படகு கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சந்தேகத்துக்கிடமான படகு கைப்பற்றப்பட்டது. இந்தப் படகின் மூலம் விடுதலைப் புலிகள் அதிசக்தி வாய்ந்த குண்டுகளை நீர்கொழும்பு பிரதேசத்துக்கு கொண்டு வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தப் படகு சிங்களவர் ஒருவருக்கு சொந்தமானதாகும். கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட படகுக்கு உதவுவதற்கு இந்தப் படகு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டம்

# விலக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு —

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டத்தை திரும்பப் பெறாவிட்டால் அரசாங்கத்துக்கான ஆதரவு விலக்கிக்கொள்ளப்படும் என்று ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின்துறை அமைச்சர் ஜோன் செனிவிரட்ன, பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, மகிந்தவின் ஆலோசகர் பரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர, திறைசேரி செயலாளர் பி.பீ. ஜெயசுந்தர ஆகியோரை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.டி.லால்கந்த, பியசிறி விஜநாயக்க மற்றும் ரஞ்சன் ஜயலால் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்றத்தில் இன்று மின்சாரசபை மறுசீரமைப்பு மசோதாவை அரசாங்கம் தாக்கல் செய்தால் அரசாங்கத்துக்கான ஆதரவு விலக்கிக்கொள்ளப்படும் என்று ஜே.வி.பி குழு எச்சரித்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விரைவில் சந்தித்து தமதுகருத்துக்களைக் கூறவும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

இருப்பினும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என்று மின்துறை அமைச்சர் ஜோன் செனிவிரட்ன கூறினார்.

ஆனால், ஜே.வி.பியோ தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும், இத்தகைய மசோதா ஒன்றை தாக்கல் செய்தால் தோற்கடிப்போம் என்றும் ஜே.வி.பியின் ஆதரவு பெற்ற மின்சார சபை தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

# பொருளாதார நிலை குறித்து விவாதிக்க ஐ.தே.க அழைப்பு

கொழும்பு —

பொருளாதார நிலைமைகள் குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு திறைசேரி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளதாவது -

நாட்டினது பொருளாதார பிரச்சினை என்பது அரசியல் பிரச்சினை அல்ல. நாட்டின் அனைத்து மக்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினை.

வெளிநாடுகளிலிருந்து அரசாங்கமானது அதிக வட்டிக்கு கடன்களை வாங்குகிறது. நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பள உயர்வுக்கு அரசு அனுமதி!

கொழும்பு —

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 32 ஆயிரம் ரூபா ஊதிய உயர்வு அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அமைச்சரவையில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால கடந்த முதலாம் ஆம் திகதி தாக்கல் செய்த அறிக்கையில் -

2006 ஜனவரி முதல் ஜனாதிபதியின் ஊதியம் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 61 ஆயிரத்து 20 ரூபாவாகவும் 2007 ஜனவரி முதல் இது 97 ஆயிரத்து 500 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

பிரதமரின் ஊதியம் 34 ஆயிரம் ரூபாவிலிருந்து 53 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 2007 ஜனவரி முதல் இது 71 ஆயிரத்து 500 ரூபாவாகவும், நாடாளுமன்ற சபாநாயகரின் ஊதியம் 31 ஆயிரத்து 800 ரூபாவிலிருந்து 50 ஆயிரத்து 900 ரூபாவாகவும், 2007 ஜனவரி முதல் இது 68 ஆயிரத்து 500 ரூபாவாகவும், எதிர்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சர்களின் ஊதியமானது 29 ஆயிரத்து 815 ரூபாவிலிருந்து 47ஆயிரத்து 407.50 ரூபாவாகவும் ஜனவரி முதல் 65ஆயிரம் ரூபாவாகவும் -

பிரதி அமைச்சர்களின் ஊதியமானது 28 ஆயிரத்து 750 ரூபாவாவிலிருந்து 46 ஆயிரத்து 125 ரூபாவாகவும் 2007 ஜனவரி முதல் 63 ஆயிரத்து 500 ரூபாவாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர்களுக்கும் இதே போல் ஊதியங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் 22 ஆயிரத்து 100 ரூபாவிலிருந்து 38 ஆயிரத்து 192.50 ரூபாவாகவும் 2007 ஜனவரி முதல் இது 54ஆயிரத்து 285 ரூபாவாகவும் மாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிபதிகளினது ஊதிய அமைப்பு முறையும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

# மீளமைப்பு பணிகள் பாதிப்பு

கொழும்பு —

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தடைகளால் சுனாமி மீளமைப்புப் பணிகள் தடைப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. மகேஸ் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியுள்ளதாவது -

தற்போதைய சூழ்நிலைகளால் கிழக்குப்பிரதேசத்தில் மீளமைப்புப் பணிகளை இடைநிறுத்தி விட்டு ஒப்பந்தகாரர்கள் பலர் வெளியேறி விட்டனர். உதவி வழங்குவோரும் வெளியேறிவிட்டனர்.

மேலும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விதிக்கப்பட்டுள்ள தடைகளால் கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகளை வாகரை போன்ற புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் எடுத்துச் செல்ல முடியாத நிலை உள்ளது. பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி இந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல படையினர் தடைவிதித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு ஒப்பந்தகாரர்களால் எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் அனைத்தும் முழுமையாக சோதனையிடப்படுகின்றன. ஒப்பந்தகாரர்கள் வெளியேறிச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணம் என அவர் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு சர்வதேச உதவிகள் கிடைக்க வேண்டும்

## தினமணி நாளேடு வலியுறுத்து

சென்னை —

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி நாளேடு வலியுறுத்தியுள்ளது.

தினமணி நாளேட்டில் நேற்று எழுதப்பட்டுள்ள ஆசிரிய தலையங்கத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நோர்வே அரசின் முயற்சியால் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த சமரச முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டு பேச்சுவார்த்தை தொடர முடியாமல் போனதை அடுத்து இலங்கையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் கண்ணி வெடித் தாக்குதலில் பலர் பலி...

தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் இலங்கை இராணுவத்தினர் குண்டு வீசித் தாக்குதல்..

தேவாலயத்தில் புகுந்து துப்பாக்கிச் சூடு..

என்று அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் சம்பவங்கள், இலங்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலை மீண்டும் கொண்டு வந்து விடுமோ என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழர்கள் தங்களது உயிருக்குப் பயந்து படகுகள் மூலம் தமிழகத்துக்கு அகதிகளாக வருவது தொடர்கிறது.

இலங்கையில் அமைதிக்கு வழி காண இந்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தி.மு.க கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதிநிலை திரும்ப இந்திய அரசு உரிய முயற்சிகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டும் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரின் தற்போதைய உண்மை நிலையை அறிய இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சி எம்பிக்கள் குழுவை அனுப்ப வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க மற்றும் தோழமைக் கட்சிகளின் கோரிக்கையை அடுத்து இந்தப் பிரச்சினை குறித்து கலந்து பேசுவதற்காக டெல்கியிலிருந்து பிரதிநிதியை அனுப்புவதாக பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா தலையிட்டதும், இந்திய அமைதிப் படை இலங்கைக்குச் சென்று திரும்பியதும் கடந்த கால நிகழ்வுகள்.

ராஜீவ் கொலைச் சம்பவத்துக்குப் பிறகு இலங்கைப் பிரச்சினையிலிருந்து விலகியே நிற்கும் இந்திய அரசு தற்போதைய நிலையில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

இலங்கைப் பிரச்சினையை அண்டைய நாட்டுப் பிரச்சினையாகக் கருதி நாம் ஒதுங்கிவிட முடியாது.

ஏனெனில் இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகத் தஞ்சம் வருபவர்கள் தமிழர்கள். அவர்கள் எண்ணிக்கை உயரும் பட்சத்தில் இங்கு பிரச்சினைகள் மேலும் தீவிரமாகும்.

அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை குறித்து இரு தமிழக அமைச்சர்கள் நேரடியாகப் பார்வையிட்டு வந்துள்ளனர். அவர்களது அறிக்கையின் அடிப்படையில் அகதிகளின் நல்வாழ்வுக்காக உரிய நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை தலைதூக்கும் போதெல்லாம், கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் அந்த நாட்டுக் கடற்படையால் தாக்கப்படும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே தொடர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை செயல்படுத்தச் செய்ய வேண்டும்.

மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தையை தொடரச் செய்வதற்கு இரு தரப்பினரையும் இணங்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிடைக்கச் செய்ய வேண்டியது முக்கியம்.

போர் மூலம் எந்தத் தீர்வையும் பெறமுடியாது என்பதை கடந்த கால வரலாறுகள் காட்டுகின்றன.

முறிந்து போன பேச்சுவார்த்தையை மீண்டும் தொடருவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இந்த வகையில் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு விடுத்துள்ள அழைப்பு சற்று நம்பிக்கையூட்டுவதாக உள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் இளைஞர் கடத்தல்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் தயாபரன் சுடராஜ் (வயது 18) என்ற இளைஞர் கடத்தப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு தாழங்குடாவைச் சேர்ந்த இந்த இளைஞர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வெள்ளை வான் கும்பலால் கடத்தப்பட்டார்.

இந்த இளைஞரைக் கடத்தியோர் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவினரான கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த இரு வாரங்களில் வாழைச்சேனை, மாங்கேணி, சந்திவெளி, கிரான், முறக்கொட்டாஞ்சேனை, வந்தாறுமூலை, மட்டக்களப்பு மற்றும் இருதயபுரம் ஆகிய பகுதிகளில் 150இற்கும் மேற்பட்ட இளைஞர்களை துணை ஆயுதக்குழுவினர் கடத்தியுள்ளனர்.

கடத்தப்பட்டோரில் பெரும்பான்மையானோர் 18 வயதுக்கும் குறைந்தோர் என்றும், இவர்கள் கருணா குழுவினர் இயங்கும் தீவுச்சேனை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் இதுவரை எந்தவித விசாரணையும் மேற்கொள்ள வில்லையென்றும், எவரும் விடுவிக்கப்படவில்லை என்றும் மட்டக்களப்பு செய்திகள் தெரிவித்தன.

# தமிழகத்தில் வாழும் ஈழ அகதிகளுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைக்க பரிந்துரை

சென்னை —

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவேண்டுமென தமிழக அமைச்சர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.

இராமேஸ்வரத்தில் இலங்கை அகதிகளின் நிலைமை மோசமாக உள்ளது. அவர்களுக்கு உதவ வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சட்ட சபை உறுப்பினர் ரவிக்குமார் கோரிக்கை விடுத்தார்.

இதைத் தொடர்ந்து அகதிகள் முகாமுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்குமாறு அமைச்சர்கள் பெரியகருப்பன், சுப. தங்கவேலன் ஆகியோரை முதல்வர் கருணாநிதி நியமித்தார்.

இவர்களிருவரும் இராமேஸ்வரம் அகதிகள் முகாமுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து, அறிக்கையை அளித்துள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் அகதிகள் முகாமில் வசிக்கும் குடும்பத்தினருக்கு வீடுகள் அமைத்துத் தரலாம் என இவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் 103 இலங்கை அகதிகள் முகாம்கள் உள்ளன. அகதிகள் முகாமில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக உள்ளதாகவும் தங்களது அறிக்கையில் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி 50 ஆயிரம் வீடுகள் அமைத்துத் தரலாம் என்று பரிந்துரைத்துள்ளனர்.

அகதிகள் முகாமில் தற்போது 2 ஆயிரம் வீடுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மக்கள் வசிப்பதற்கே உதவாத சூழலில் உள்ளதாகவும், பெரும்பாலான வீடுகளில் மேற்கூரையே கிடையாது. இதனால் மழைக்காலங்களில் இவற்றில் மக்கள் வசிக்கவே முடியாததாகவும் -

இராமேஸ்வரம் அகதிகள் முகாமில் உள்ள கழிப்பிடங்கள், பயன்படுத்துவதற்கேற்ற நிலையில் இல்லை எனவும், இதனால் அகதிகள் முகாமில் உள்ளவர்கள் குறிப்பாகப் பெண்கள் கடுமையாக அவதிப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அகதிகள் முகாமிலுள்ள உண்மை நிலவரத்தை வெளிப்படுத்தும் புகைப்படங்களை முதல்வர் பார்த்து கண் கலங்கியதாகவும் தெரிகிறது.

வீடுகள் அமைத்துத் தருவதற்கான காலக்கெடு எதையும் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. இருப்பினும், இலங்கைக்குத் திரும்ப விரும்பாத 53 ஆயிரம் அகதிகள் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துத் தரலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அகதிகள் முகாமில் போதிய குடிநீர் வசதி இல்லாதது மற்றும் மின் வசதி இல்லாததையும் நேரில் பார்த்த போது, தங்களுக்கு மிகுந்த அதிரச்சியாக இருந்ததாக அமைச்சர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்ற உடனடியாக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், குறிப்பாக இலங்கை அகதிகளுக்கு அளிக்கப்படும் மாதாந்த உதவித் தொகையை அதிகரித்து அளிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், எவ்வளவு தொகை அளிக்கலாம் என்று குறிப்பிடவில்லை. தற்போது 150 ரூபா முதல் 250 ரூபா வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அகதிகள் முகாமில் உள்ள பலர், உள்ளூரில் கிடைக்கும் வேலைக்காக முகாமிலிருந்து வெளியேறிச் செல்கின்றனர். இதனால் இவர்களது பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது.

இவ்வாறு நீக்காமல், அகதிகளுக்கு அளிக்கப்படும் உதவிகள் தொடர்ந்து அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். மத்திய அரசிடம் இதுகுறித்து பேசி, விடுபட்ட அகதிகளின் பெயர்களைப் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

உயர்கல்வி பயில்வதற்கு அகதிகளின் குழந்தைகளுக்கு ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்றும், குறிப்பாக ஒரு மாணவர் பிளஸ் 2 தேர்வில் 1130 மதிப்பெண் எடுத்து மருத்துவம் படிக்க விரும்புவதையும், தங்களது 15 பக்க அறிக்கையில் அமைச்சர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

## தீர்வையற்ற வாகனங்கள் ஜே.வி.பிக்கும் வேண்டுமாம்



கொழும்பு —

மக்கள் கடுமையான வாழ்க்கைச் சுமையை அனுபவித்து வருவதானால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகனங்களைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லையென தெரிவித்துவந்த ஜே.வி.பி. - அந்தத் தீர்மானத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளது.

இதன்படி 20 லட்சம் ரூபா பெறுமதியான 38 வாகனங்களைத் தீர்வையின்றிப் பெறுவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.


தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த சொகுசு வாகனங்களைப் பெறுவதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற விவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபாலவுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கடந்த 8 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால இது குறித்து தெரிவித்து, அதற்கான அனுமதியையும் பெற்றுள்ளார்.

தீர்வையற்ற வாகனங்களைப் பெற்று, அவற்றை விற்றுப் பணத்தைப் பெறுவதற்கு தமக்குத் தேவையுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தலைமைக்குக் கொடுத்த அழுத்தத்தினாலேயே இந்த வாகனங்களைப் பெறுவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. (தே)

# சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பு வழங்கப்படும்

## ஐ.நா.செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் புதிய கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்ற போது, இலங்கையின் சமாதானத்துக்காக ஐக்கிய நாடுகள் சபையின் அர்ப்பணிப்பு தொடர்ரான செய்தி ஒன்றைக் கொபி அனான் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கெப்பிற்றிக்கொல்லாவ உட்பட்ட சம்பவங்கள் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவங்களை ஏனைய சம்பவங்களுடன் ஒப்பிட முடியாது என்பதன் காரணமாகவே ஜனாதிபதி - கெப்பிற்றிக்கொல்லாவ பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் செய்ததாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இங்கு தெரிவித்தார்.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி உறுப்பினர்களை நியமித்தமை தொடர்பாக இங்கு பிரச்சினை எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர - 17 ஆவது அரசியலமைப்பில் காணப்படும் குறைபாட்டை நீக்குவதற்காகவே ஜனாதிபதி இந்த முனைப்பை மேற் கொண்டதாகக் குறிப்பிட்டார். (01)

ராஜா யாழ்ப்பாணம்



பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த

பட்டியல்

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டு பயலே

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த

கஜினி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# வடமராட்சி பகுதிகளில் படம் பிடிக்கும் படையினர்!

நெல்லியடி—

வடமராட்சிப் பகுதிகளில் பவள் கவச வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் வீதியில் நின்ற மக்களை விடியோ படம்பிடித்துச் சென்றதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை வடமராட்சிப் பிரதேசத்தினுள் பத்துக்கு மேற்பட்ட பவள் கவச வாகனங்களில் நுழைந்த இராணுவத்தினர் - வாகனத்தில் இருந்தவாறே வீதிகளில் நின்ற மக்களை படம்பிடித்தனர்.

குஞ்சர்கடை, மூத்த விநாயகர் கோவிலடி மற்றும் நெல்லியடி நகர் பகுதிகளில் நின்ற மக்களையே இவர்கள் படம் பிடித்தனர்.

இதன்பின்னர் மந்திகை ஊடாக பருத்தித்துறை நகருக்குச் சென்ற பவள் கவச வாகன அணியினர் - பருத்தித்துறை நகரில் நின்றவர்களையும் படம் பிடித்தது விட்டு பருத்தித்துறை நகர் இராணுவ முகாமுக்குள் சென்றதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (12)

# சமுத்திரதீபம் அம்புலன்ஸ் படகு நயினாதீவில் கட்டப்பட்டுள்ளது

நெடுந்தீவு —

தீவுப்பகுதி மக்களது அவசர மருத்துவ சேவைக்காக உருவாக்கப்பட்ட அம்புலன்ஸ் படகு தற்போது நயினாதீவில் தரித்துவிடப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப் பட்டு வந்த 'சமுத்திர தீபம்' அம்புலன்ஸ் படகு இதுவரை காலமும் குறிகாட்டுவான் துறைமுகப்பகுதியிலேயே தரித்துவிடப்பட்டிருந்தது.

இதேவேளை, தற்போது நெடுந்தீவுக்கென கியூமெடிக்கா நிறுவனத்தால் அம்புலன்ஸ்படகு வழங்கப்பட்டுள்ளமையால் நயினாதீவு, அனலைதீவு பகுதி மக்களது தேவைக்கு சமுத்திர தீபம் படகு பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# நீதிமன்றால் பறிக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பண நீதிவான் நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள், கைக்கடிகாரங்கள, மோட்டார்கள், தையல் இயந்திரங்கள் என்பன நாளை மறுதினம் நீதிமன்ற வளவினுள் வைத்துக் காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களை உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலயத்துக்கு முன்பு தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பொது மக்கள் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலயத்துக்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அந்தப் பொருட்கள் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை நீதிமன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

விற்கப்பட்ட பொருட்களுக்குப் பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்றவேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

# மின் கட்டண அறவீடு; பொது மக்கள் விசனம்!

மட்டுவில். —

தென்மராட்சியின் கல்வயல், மட்டுவில் வடக்கு பகுதி மக்களுக்கு மின்மானிகள் பொருத்தப்படாமல் மின் கட்டணங்கள் அண்ணளவாக அறிவிடப்படுகிறது. இதனால் இந்தப் பகுதி பொது மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தப் பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டபோது, மின்மானிகள் இல்லாமையால் அவை கிடைத்த பின்னர் பொருத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது மின்மானிகள் வந்துள்ளபோதும் புதிதாக இணைப்புப் பெறுபவர்களுக்கு மட்டுமே அவை பொருத்தப்படுகின்றன. இதனால் ஒரே வீதியில் ஒரு வீட்டில் மின்மானி பொருத்தப்பட்டு கட்டணம் அறவிடப்படும்போது, அருகிலுள்ள வீட்டில் மின்மானியில்லாது அதிகரித்த கட்டணம் அறிவிடப்படுகின்றது.

சாவகச்சேரி மின்சாரசபையினரது இத்தகைய பாரபட்சமான பொறுப்பற்ற நடவடிக்கையால் பொது மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (24)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி




கோண்டாவில் சி.பி.கணினி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் நிறுவனத்தின் சார்பில் உதவித் தொழில் ஆணையாளர் சி.முத்துக்குமாரசாமி கல்லூரி அதிபர் பொ.கமலநாதனிடம் நூல்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நாளை தொடக்கம் மூன்று நாட்கள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

# கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்களுடனான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தக் கலந்துரையாடல் அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறுமென நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் - தற்போதைய சூழ்நிலையில் கிராம அலுவலர்களின் கடமைகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் குறித்த பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# அலங்கார உற்சவம்

சாவகச்சேரி—

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தை சிவாச்சாரியார் சிவஶ்ரீ விஸ்வநாதக் குருக்கள் நடத்துவார்.

# பொங்கல்

தெல்லிப்பளை—

தெல்லிப்பளை கிழக்கு சிக்கியம்புளியடி சிக்கியம்பதி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தான வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் வளுத்துப் பானை பூசையும், பொங்கலும் காலை 9 மணிக்கு விசேட பூசையுடன் நடைபெறவுள்ளது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஆறு



பெயர் : ப.கௌஷிகா
முகவரி : பருத்தித்துறை.




# சிப்பாய் காணாமல் போன வழக்கில் ஏழுபேர் பிணையில் விடுதலை


நெடுந்தீவு —

நெடுந்தீவீல் கடந்த வருட இறுதியில் கடற்படை சிப்பாய் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏழு பேரும் ஊர்காவற்துறை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 19 ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது - சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் இல்லாமையால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

இதனையடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதேவேளை இந்த வழக்குடன் தொடர்புடைய ஒருவர் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காமையால் அவருக்கான காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதோடு, நீதிமன்றத்தால் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# ஒவ்வொரு மாணவர்க்குமான கல்வி



யாழ்ப்பாணம் —

கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு கிராமிய பொருளாதார ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (ரீடோ) யுனிசெப்பின் அனுசரணையுடன் கல்வி தொடர்பான விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

பொதுமக்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து 'ஒவ்வொரு மாணவருக்குமான கல்வித் திட்டம்' எனும் தலைப்பில் சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேர்ஸ் திருடிய பெண் மடக்கிப் பிடிப்பு!

நெடுந்தீவு—

பயணப் பொதியினுள் இருந்த பேர்ஸை மர்மமாகத் திருடிக் கொண்டு தப்பிச் சென்ற பெண் பயணி ஒருவர் நெல்லியடிப் பகுதியில் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸில் ஏறிய பெண்ணொருவர் - இருக்கையில் இருந்த பெண்ணொருவரிடம் தனது பயணப்பொதியை கொடுத்து விட்டு நின்றவாறே பயணம் செய்தார்.

பயணப்பொதியை வைத்திருந்த நபர் நெல்லியடியில் இறங்கியதும் அவரது இருக்கையில் இருந்த அதுவரை நின்றிருந்த பயணி - பயணப்பையினுள் இருந்த பேர்ஸை பார்த்த வேளை - பேர்ஸ் காணாமற் போனதும் அதிர்ச்சியடைந்து மயக்கமடைந்தார்.

இதன் பின்னர் இவருடன் வந்த உறவினர்களின் உதவியுடன் நெல்லியடிப் பகுதியில் தேடிய வேளை - பிரஸ்தாப திருட்டுப் பெண் பிடிக்கப்பட்டு அவரிடமிருந்து பேர்ஸ் மீட்கப்பட்டதோடு பின்னர் அவர் பொதுமக்களால் நையப்புடைக்கவும்பட்டார். (12)

# இளைஞர் குழுவின் அட்டகாசம் அதிகரிப்பு

வடமராட்சி —

வடமராட்சி ஊரிக்காடு, கம்பர் மலைப் பகுதிகளில் இளைஞர் குழுவொன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரவித்துள்ளனர்.

கம்பர்மலைப் பகுதியில் இளைஞர் குழுவொன்று பலத்த அட்டகாசங்களில் ஈடுபட்டு வருவதோடு அண்மையில் வீடொன்றுக்குள் புகுந்து தாக்கியதில் இளைஞர் ஒருவரும், அவரது சகோதரியும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுயதொழிலை ஊக்குவிக்க ஐ.ஓ.எம். நிறுவனம் உதவி

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர்களது கருவாடு பதனிடும் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக - ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் கடந்த வாரம் நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான அரைத்த உப்பினை உதவியடிப்படையில் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் ப.யேசுதாசன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஐ.ஓ.எம். நிறுவன உதவித் திட்ட உத்தியோகத்தர்களான எஸ்.ரஞ்சித், எஸ்.இராஜேந்திரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை கடந்த வருடம் இந்த நிறுவனத்தால் சுமார் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான அலுவலக தள பாடங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் கஷ்டப் பிரதேசமான நெடுந்தீவில் உள்ள கடற்தொழிலாளர்களது முன்னேற்றம் கருதி ஐ.ஓ.எம். நிறுவனம் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (113)

# குடிநீர் விநியோகத்துக்கென ஒருலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு—

நெடுந்தீவு பிரதேச மக்களுக்கு வரட்சிக்கான குடிநீர் விநியோகத்துக்கென யாழ்.மாவட்ட செயலகத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நிதியைப் பயன்படுத்தி, நெடுந்தீவில் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு நெடுந்தீவு பிரதேச சபையினரது பவுசர் மூலம் நாளாந்தம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீரின் அளவை மட்டுப்படுத்தும் பட்சத்தில் - வரட்சி காரணமாக ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டையும், நீர் உவராவதையும் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (113)

# பேசாலை தேவாலயம் மீதான தாக்குதல்; மன்னார் ஆயர் வத்திக்கானுக்கு கடிதம்!



மன்னார்—

இலங்கையின் மிகப் பெரிய தேவாலயங்களில் ஒன்றான மன்னார் விக்டோரி தேவாலயத்தில் கடற்படையினரது தாக்குதலில் அப்பாவி மக்கள் இரத்தம் சிந்தியமையால் தேவாலயத்தின் புனிதம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு பொதுமக்களின் சடலங்களை எரியூட்டிவிட்டு வந்திருக்கிறேன் என மன்னார் பேசாலை தேவாலயம் மீதான கடற்படையின் தாக்குதல் குறித்து வத்திக்கானுக்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜேசேப் அடிகளார் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உள்ளூர் மக்கள் கடற்படையினரால் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். பேசாலையில் உள்ள 7 ஆயிரம் மக்கள் தங்களை இந்தியாவுக்கோ அல்லது விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்கோ அனுமதிக்குமாறு கெஞ்சுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் இந்தத் தேவாலயம் தாக்கப்பட்டதாக அரசாங்கம் பொய்யான தகவலைப் பரப்பி வருகின்றது.

பேசாலையில் உள்ள கடற்படையினரும், பொலிஸாருமே இந்தத் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தோரைக் காப்பாற்றவும், அம்புலன்ஸில் கொண்டு செல்லவும் என்னை இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.

உள்ளூர் இராணுவ தளபதியை அழைத்து பேசாலையில் உள்ள 7 ஆயிரம் மக்களை சந்திக்கச் செய்தோம். பேசாலையில் உள்ள கடற்படையினரது கொடுமைகள் குறித்து அந்தமக்கள் கதறியழுத நிலையில் தகவல்களைத் தெரிவித்தனர்.

தங்களை விடுதலைப் புலிகளின் பகுதிக்கோ அல்லது தமிழ் நாட்டுக்கோ செல்வதைத் தடுக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டனர்.

இல்லையெனில் கடற்படையினரால் நாங்கள் அனைவரும் ஒருநாள் கொல்லப்பட்டுவிடுவோம் எனறும் அவர்கள் தெரிவித்தனர்.

புனித வழிபாட்டு இடமான தேவாலயம்கூட எங்களுக்குப் பாதுகாப்பில்லாமல் ஆகிவிட்டது. ஆகையால் அப்பாவி மக்களாகிய நாங்கள் எங்கே போவோம் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அப்பாவி மக்களுக்கு உள்ளூர் இராணுவத் தளபதி உத்தரவாதம் அளித்த போதும், இத்தகைய உத்தர வாதங்கள் தங்களுக்குப் பலமுறை



அளிக்கப்பட்டுவிட்டதாகவும், இந்த வார்த்தைகள் எல்லாம் நீரின் மேல் எழுதியவை என்றும் மக்கள் குமுறினர்.

பேசாலை கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதலின் போது வங்காலைப்பாடில் மீனவர்கள் குடியிருப்புகளையும், மீன்பிடி உபகரணங்களையும் கடற்படையினர் எரித்துச் சாம்பலாக்கினர்.

மேலும், காட்டாஸ்பத்திரி கடற்கரையில் மீன்பிடித்துவிட்டு வந்து கொண்டிருந்த ஆறு மீனவர்களை மண்டியிடச் செய்து, அவர்களின் வாயில் துப்பாக்கியை நுழைத்து சுட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் இறந்துள்ளனர். அவர்கள் கைகளில் அடையாள அட்டைகளைப் பிடித்த படியே இறந்துள்ளனர்.

கடற்படையினரிடமிருந்து தப்பி ஓட முயன்ற இருவர் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

பேசாலைப் பகுதியில் கடற்படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பல வீடுகள் சேதமடைந்தன. விக்டோரி தேவாலயத்தின் சுவர்களிலும் அந்தச் சுவடுகள் உள்ளன.

காற்சட்டை அணிந்து இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் தேவாலயத்தின் மீது கைக்குண்டுகளை வீசினர். 6 ஆயிரம் மக்கள் உள்ளே இருந்த நிலையில் துப்பாக்கிச் சூடுகளை நடத்தினர். உள்ளே இருந்த மக்கள் கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிக்கொண்டனர்.

இதில் பெரும் தொகையான பொதுமக்கள் படுகாயமடைந்தனர். தேவாலயத்தில் இருந்த புனித வளனார் விக்டோரி சிலையும் சேதமடைந்துவிட்டது.

கடற்படையினரில் ஒருவர் ஜன்னலைத் திறந்து உள்ளே கைக்குண்டை வீசினார். இதில் பெருந்தொகையான மக்கள் காயமடைந்தனர் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்!

மன்னார்—

மன்னாரில் கைது செய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர் சூசை ஜேசுதாசன் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பேசாலையில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு உதவிப் பணிகளை வழங்கிய வேளை இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்தவரெனவும், மன்னார் வைத்தியசாலையில் கடமையாற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தவே இவர் வந்ததாகவும் தெரிவித்தே இவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இவரை மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ரி.கே.பிரபாகரன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்த நீதிவான் இவரை 5 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்ததாக மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் கதிரேசன் தெரிவித்தார்.(மோ)

## கடற்புலிகளுடன் வர்த்தகர்கள் சந்திப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு வர்த்தகர்களுக்கும், கடற்புலிகளுக்குமிடையே கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

முல்லைத்தீவு நகரப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வர்த்தகர் சங்கத் தலைவர் மனோ தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்புலிகளின் முல்லைத்தீவு நகரத் தளபதி தினேஸ், தளபதி மங்களேஸ் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தக நிலையங்களில் பணியாளர்கள், உரிமையாளர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் இதில் பங்கேற்றனர்.

## தேசியத் தலைவரின் நிதியிலிருந்து பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பு

கிளிநொச்சி—

தமிழீழ தேசியத் தலைவரின் நிதியிலிருந்து முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 3 பாடசாலைகளில் இருமாடிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உடையார் கட்டு மகாவித்தியாலயம், பாரதிபுரம் இருட்டுமடு பாடசாலைகளிலேயே இந்த மாடிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு வலய பாடசாலைகளில் காணப்படும் கட்டட நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டே இந்தக் கட்டடப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை முல்லைத்தீவில் சுனாமியால் அழிவடைந்த 13 பாடசாலைகளில் கள்ளப்பாடு பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் புனரமைப்பு பணிகள் முழுமையாகத் தொடங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

## சிறுவர் நாடக பயிற்சி பட்டறை

இராமநாதபுரம்—

இராமநாதபுரம் அ.த.க பாடசாலையில் சிறுவர் நாடக பயிற்சி பட்டறை அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கிளிநொச்சி ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.விஜயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முழுநாள் பயிற்சி பட்டறையாக நடைபெற்ற இந்த நிகழ்வில் தரம் 3,4,5 ஐச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். (இ)

## பொலிஸாரால் கைது

மன்னார்—

மன்னாரிலிருந்து முருங்கன் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் அடிக்கடி சாராயம் கடத்தி வந்த நபரை கடந்த வியாழக்கிழமை கைது செய்த பொலிஸார் மன்னார் நீதிமன்றில் ஆஜராக்கினர்.

குறித்த நபர் நீதிமன்றில் ஆஜரான போது இவரது மோட்டார் சைக்கிளைப் பறிமுதல் செய்ததோடு 10ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதிவான் என்.எம்.எம் அப்துல்லா விடுதலை செய்தார்.

குறித்த நபர் நீண்ட நாட்களாகவே இவ்வாறு சாராயக்கடத்தலில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரமே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமை குறிப்படத்தக்கது. (மோ)

## அண்மைய வன்முறைகள் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார்—

மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள், மக்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று மாவட்ட யூ.என்.டி.பி அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நடை பெற்றது.

சி.எச். ஏயின் மன்னார் மாவட்ட அதிகாரி இலேயர் பீற்றரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரின் பிரதிநிதிகள் ஏராளமான தொண்டு நிறுவனங்கள் மற்றும் கிராமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டன.

இந்தக் கூட்டத்தில் பேசாலை காட்டாஸ்பத்திரி, வங்காலைப்பாடு வைத்தியசாலைச்சந்தி, விளையாட்டரங்கச்சந்தி மற்றும் சிறுக்கண்டல் பகுதிகளில் நிகழ்ந்த அனர்த்தங்கள், ஆக்கிரமிப்புகள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக அனைத்து நிறுவனங்களும், கிராமிய சங்கங்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிபருக்கு கடிதம் எழுத வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. (மோ)

## முல்லைத்தீவு வலய கல்வி பணிமனைக்கு கட்டடம் அமைக்க காணி ஒதுக்கவில்லை

கிளிநொச்சி—

முல்லைத்தீவில் வலயக் கல்விப் பணிமனைக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணி ஒதுக்கப்படவில்லையென முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தத்துக்கு முன்னர் ஒரு கோடியே 10 லட்சம் ரூபா செலவில் முல்லைத்தீவு நகரில் புதிய வலயக் கல்விப் பணிமனைக்கான கட்டடம் அமைக்கப்பட்டது.

ஆனால், சுனாமியால் அந்தக் கட்டடம் முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு முல்லைத்தீவு அரச செயலகம் காணியைத் தெரிவு செய்தால், புதிய கட்டடப் பணிகளை வலயக் கல்விப் பணிமனை தொடங்குமென அவர் தெரிவித்தார். (கு)

## பேசாலை தேவாலயத்தில் அபிஷேகம் செய்யப்பட்டது

மன்னார்—

மன்னார் புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் அபிஷேகம் இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை ஆலயத்தில் அபிஷேகம் செய்துவைத்தார். இந்த ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தில் பெண் மணி ஒருவர் உயிரிழந்ததை அடுத்தே இந்த அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. (மோ)

## விமானத் தாக்குதலால் கடற்தொழில் பாதிப்பு!

கிளிநொச்சி—

முல்லைத்தீவில் இடம்பெற்ற விமானத்தாக்குதலால் கடற்தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் மரியராசா தெரிவித்தார்.

கடலில் கடற்படையினரின் தாக்குதல் அச்சத்துக்கு மத்தியில் கடற்தொழிலில் ஈடுபட்டு வரும் வேளை விமானத்தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதில்லை.

இதனால் பல குடும்பங்கள் வறுமையில் வாடுவதாகவும் அவர் தெரிவித்தார். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

- திருக்குறள்

## நமது நோக்கு

# மெய் மறைக்க பொய் பிரசாரம்!

இப்போது தென்னிலங்கை ஊடகங்களும் சரி, அரசாங்கமும் சரி சிங்கள மக்களின் உணர்வுகளை தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பி விடுவதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முன்னர் - 'தமிழரெல்லாம் புலிகள், புலிகள் என்றால் பயங்கரவாதிகள்' என்ற கோணத்தில் தான் எடுத்ததற்கெல்லாம் தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அதைவிட வேகமாக அரசாங்கமும், அதன் தொடர்பு சாதனங்களும் செயற்பட்டன. இன்று மீளவும் அதேநிலை தான் உருவாகியிருக்கிறது. இப்போது எங்கு எந்தத் தாக்குதல் நடந்தாலும் அதை இனவாதக் கண்ணோட்டத்துடன் மட்டும் பார்க்காது - சிங்கள மக்களை இனவெறிக் கண்ணோட்டத்துடன் நோக்கத் தூண்டும் வகையில்தான் அரசும், சிங்கள ஊடகங்களும் செயற்படுகின்றன.

அல்லைப்பிட்டி, வங்காலை, புத்தூர், நெல்லியடி, மானிப்பாய், திருமலை, மூதூர் என்று தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்று போடப்பட்ட போதும் மௌனமாக இருந்தது மட்டுமன்றி - அதையும்கூட புலிகள் செய்ததாகவே அரசும், சிங்கள ஊடகங்களும் செய்த பிரசாரம்தான் - கேலிக் கூத்தின் உச்சக் கட்டம்.

அதேபோல் - கெப்பிற்றிக்கொல்லாவ சம்பவத்தையும், ஒமடியாமடு சம்பவத்தையும் புலிகளுடன் தொடர்புபடுத்தி பிரசாரம் செய்த அரசு - கோமாவதி சைத்ய மீதும் தாக்குதல் நடத்தியதாக புலிகள் மீது குற்றம் சாட்டியது.

இவற்றையெல்லாம் புலிகள் மறுத்தாலும், அரச தரப்பும் சரி, சிங்கள ஊடகங்களும் சரி- செய்து வரும் பிரசாரங்கள் புலிகளுக்கு மட்டும் எதிரானதாகத் தெரியவில்லை.

சிங்கள, பௌத்த மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி - இனவெறியைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய முற்படும் எண்ணமே இத்தகைய பிரசாரங்களில் தெரிகிறது.

தமிழ் மக்களின் மனங்களையோ அல்லது அவர்களின் போராட்டத்தையோ வெல்ல முடியாத கட்டங்களில் இத்தகைய இனவெறிப் பிரசாரங்களை முன்னெடுப்பது தென்னிலங்கை ஆட்சியாளர்களின் வழக்கமாகும்.

இப்போதும் அதேபோலத்தான் நடந்திருக்கிறது. தொடர்ச்சியான படுகொலைகள் சர்வதேச ரீதியில் பெரும் கண்டனங்களை உருவாக்கிவிட்டிருக்கும் தருணத்தில் - அந்தக் கண்டனங்களை அப்படியே தமிழர் தரப்பு மீது திருப்பிவிட்டு தப்பிக்கும் உத்தியைத் தான் அரசு கையாள்கிறது.

புலிகளை சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகளாகப் பிரசாரம் செய்து- பல நாடுகளில் தடைசெய்வித்த அரசு- இலங்கைத் தீவில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதை மறைக்கத்தான் இத்தகைய இனவெறிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதன் மூலம் அரசு தான் தப்பிக்க நினைப்பதுடன், தமிழரின் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்காக ஒன்றுபட்ட சிங்கள இனத்தின் ஆதரவையும்பெற முயற்சிக்கிறது.


முழுச் சிங்கள மக்களும் போரை விரும்பாத நிலையில்- அனைவரையும் தமிழருக்கு எதிரான போரில் இறங்க நிர்ப்பந்திக்கும் வகையிலானதாகவே அரசின் நிலைப்பாடு இருக்கிறது.

அது போலவே, சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களையும், புலிகளையும் பயங்கரவாதிகளாக்கி என்ன நடந்தாலும் தட்டிக்கேட்கக் கூடாதென்ற நிலையை உருவாக்கவும் முயற்சிக்கிறது.

ஆனால், அரசு நிச்சயம் இந்த முயற்சியில் வெற்றிபெறாது. ஏனெனில், தமிழ் மக்களின் போராட்டத்தில் நீதியும், தர்மமும் இருக்கும்வரை எந்தப் போலியான பிரசாரமும் வெற்றிபெற வாய்ப்பில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# தற்போதைய நிலைமைகள் குறித்து அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்

## ஐ.தே.க.தெரிவிப்பு



கொழும்பு —

சமாதான நடவடிக்கைகள் மற்றும் யுத்த நிறுத்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் யுத்தமோ, சமாதானமோ இல்லாத நிலையில் உயிர்ப் பலிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலை தொடர்ந்து செல்வதா? அல்லது சமாதானம் ஏற்பட வேண்டுமா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் என ஐ.தே.க.பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் எந்த ஒரு நிலையையும் நடைமுறைப்படுத்தாது அமைதியாக செயற்படுவதனால் நாட்டில் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன், பாதுகாப்பு இறைமைக்கான அச்சுறுத்தலும் ஏற்பட்டிருக்கிறது.

கௌரவமான சமாதானத்தையோ அல்லது வேறு ஏதாவது ஒன்றை முன்வைத்து நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், அவரது அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறோம்.

மக்களுக்குப் பாதுகாப்பான ஓர் சூழலை ஏற்படுத்த அரசாங்கம் தவறும் பட்சத்தில் ஐ.தே.க. மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டி நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வருடாந்த மஹோற்சவம்

உடுவில் —

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில் மஹோற்சவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

ஜூலை 2ஆம் திகதி ஆனி உத்தர சங்காபிஷேகமும், 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழா, சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர் உற்சவமும் இடம்பெறும். மறுநாள் தீர்த்த உற்சவம் நடைபெற்று மாலை கொடியிறக்கத் திருவிழா நடைபெறவுள்ளது. (101)

* * *

உடுவில் —

அராலி வண்ணபுரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இந்த விழா தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறும். ஜூலை முதலாம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும், இரவு ஆனி உத்தர நடராஜர் அபிஷேகமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் தீர்த்தமும், மாலை கொடியிறக்கம் என்பன நடைபெறும். (101)

# புலிகள் பேச்சில் கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் !

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

கொழும்பு —

விடுதலைப் புலிகளை ஜெனிவாப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் பேரவையிடம், மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்க கேட்டுள்ளார்.

ஜெனிவாவில் ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழு கூட்டத் தொடரின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமைகள் தொடர்ந்து செல்லுமாயின் பேரழிவினைச் சந்திக்க நேரிடும். இந்த நிலையைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் விடுதலைப் புலிகளை பேச்சுக்களில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சுற்றாடல் தினத்தில் மரம் நடுகைத்திட்டம்

உடுவில் —

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேச சபையால் சிரமதானம், மரம் நடுகை போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் குமுதினி வசந்தரூபா தலைமையில் பிரதேசசபை ஊழியர்கள், சன சமூக நிலைய உறுப்பினர்கள், மயான அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானம், தாவடி இந்து மயானம், மருதனார் மடம் பூவோடை இந்து மயானம், கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானம் ஆகியவற்றை சிரமதானம் மூலம் துப்பரவு செய்துள்ளனர். (101)

# முத்திரை வரி நடைமுறையில்

மட்டுவில் —

கடந்த பல வருடங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த முத்திரை வரியை அரசு மீண்டும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முத்திரை வரி சுற்றுநிருபம் 2 இன்படி கடந்த ஏப்ரல் மாதம் நான்காம் திகதி இந்த முத்திரை வரி நடைமுறை மீளவும் அமுலுக்கு வந்துள்ளது.

இதன்படி ரூபா 1000 இற்கு உட்பட்ட கொடுப்பனவுகளுக்கு முத்திரைவரி இல்லை. சத்தியக்கடதாசிக்கு ரூபா 100, அனுமதிப் பத்திரங்களுக்காக ரூபா 1000, சம்பளக் கொடுப்பனவுகளின் போதும் ஓய்வூதியம் மற்றும் பிறகொடுப்பனவுகளின் போதும் 25 ஆயிரத்துக்கு மேற்படின் 25/-வும், 40 ஆயிரத்துக்கு மேற்படின் 40/-வும், 50 ஆயிரத்துக்கு மேற்படின் 50/- முத்திரை வரியாக அறவிடப்படும்.

அத்துடன் ஏனைய கொடுப்பனவுகளின் போது 1000/- முதல் 49 ஆயிரம் வரை ஒவ்வொரு 1000/- அல்லது அதன் பகுதி ஒன்றுக்கு 1 ரூபாவும், 50 ஆயிரத்துக்கு மேற்படின் 50/- ரூபாவும் அறவிடப்படும். (24)

# புத்தரின் பல்லுக்கு கொடுக்கும் மரியாதை அவரின் சொல்லுக்குக் கொடுப்பதில்லை


தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான அகிம்சை வழியிலான சாத்வீகப் போராட்டங்களைப் பிரயோகித்து அடக்க முயன்றதன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டி வந்தது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஓர் ஆயுதப் போராட்டமாகப் பரிணாமம் பெறத் தொடங்கிய காலகட்டத்தில் - பொதுவாக ஓர் ஐயம் பல தரப்பினரிடையேயும் எழுந்து நின்றது. முப்படைகளையும் கொண்டிருக்கும் ஓர் இனவாதப் பெரும்பான்மை இன அரசின் ஒடுக்குமுறைகளை ஓர் சிறுபான்மையினம் ஆயுதப் போராட்டத்தால் வெல்ல முடியுமா? என்ற கேள்வி அந்தக் காலகட்டத்தில் பெரிதாகவே எழுந்திருந்தது. அன்றைய தினம் பொல்லுகளோடும், துப்பாக்கிகளோடும் திரிந்து சண்டித்தனம் செய்து கொண்டிருந்த சிங்களப் பொலிஸ்காரர்களைக் கண்டாலே அச்சம் கொள்கின்ற நிலையில்தான் சாதாரண தமிழ் பொதுமக்கள் இருந்தார்கள்.

தமிழீழப் பகுதிகளில் சிங்கள பொலிஸ்காரர்களின் தான்தோன்றித்தனமான செயல்களும், சொற்களுமே எழுதப்படாத சட்டமாக விளங்கின. சிங்கள அரசுகளின் பேரினவாத ஒடுக்குமுறைகளின் ஒரு குறியீடாகவே சிங்கள பொலிஸ்காரர்கள் விளங்கினார்கள். அப்படிப்பட்ட சிங்கள பொலிஸ்காரர்களை எதிர்க்க முனைகின்ற செயற்பாடுகளைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாத நிலைதான் அன்று இருந்தது.

'தமிழர் தேசம் முப்படைகளையும் கொண்ட ஒரு தேசமா கத் தன்னுடைய பாரம்பரியப் பிரதேசங்களின் பெரும்பான்மைப் பகுதிகளை விடுவித்த தேசமாகப் பின்னாளில் பரிமாணம் பெறும்' என்று அப்போது பலரும் எண்ணியிருக்க மாட்டார்கள்தான்! ஆயினும், அது அவ்வாறே ஆயிற்று! காலத்தின் கொடையான தேசியத் தலைமையும், தேசத்தின் வித்துக்களான மாவீரர்களின் கொடையும், போராளிகளின் தீரமும், பொது மக்களின் பங்களிப்பும் அதனை நிதர்சனமாக்கியது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஓர் அம்சத்தை உளவியல் ரீதியாகவும், நாம்



தர்க்கிக்க முயலலாம். விடுதலைப் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்கின்ற ஒவ்வொரு வேளையிலும், தமிழ் மக்களில் குறிப்பிட்ட சில வீதத்தினர் சஞ்சலம் கொண்டிருந்தமையையும் நாம் அறிவோம்.

குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் போர்க் காலத்தில் தெளிவாகவும், சமாதானம் என்று அழைக்கப்படுகின்ற காலத்தில் குழப்பமாகவும் இருப்பதை நாம் முன்னரும் தர்க்கித்து உள்ளோம். இன்றைய தினம் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து உலக நாடுகளும் அக்கறை எடுத்து வருகின்ற வேளையில், குறிப்பிட்ட சில நகர்வுகள் சிலருக்குக் குழப்பத்தையோ, சஞ்சலத்தையோ தருவது வியப்பில்லைத்தான்...!

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் கட்டம் கட்டமாக இலங்கையின் முப்படைகளை எதிர்கொண்ட போதும், பின்னர் இலங்கையின் முப்படைகளை ஒருங்குசேர எதிர்கொண்ட போதும் குறிப்பிட்ட தொகை மக்களுக்கு ஐயமும் அச்சமும் இருந்தது என்பதும் உண்மைதான்! உள்ளூர் சிங்களப் பொலிஸ்காரர்கள் மீது அன்றிலிருந்த அச்சத்தின் ஒரு நீட்சிதான் அது.

இதே ஐயமும், அச்சமும் அண்டை நாட்டுப் பொலிஸ்காரரான இந்திய இராணுவம் தமிழீழப் பிரதேசங்களினுள் பிரவேசித்த போது, தமிழ் மக்களில் கணிசமானோருக்கு இருந்தது. உள்ளூர்ச் சிங்களப் பொலிஸ்காரரின் மீதான பயம் தெளிந்து வருகின்ற வேளையில், அண்டை நாட்டுப் பொலிஸ்காரன் மீதான பயம் உருவாகியது.

இப்போது உள்ளூர் பொலிஸ்காரனும் வெளியேறி, அண்டை நாட்டுப் பொலிஸ்காரனும் வெளியேறி விட்ட பின்னர், உலகப் பொலிஸ்காரன் உள்நுழையப் பார்க்கின்றான் என்ற சந்தேகம் பலமாக எழுந்து வருவதை நாம் காண்கின்றோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கால கட்டத்தில் மிக முக்கியமான கருத்துக்களை முன்வைத்துத் தர்க்கிக்க விரும்புகிறோம். இலங்கை அரசுகள் தொடர்ந்து முன்வைத்து வந்த அடிப்படையான வாதம் ஒன்று இப்போது முழுமையாகத் தகர்ந்து விட்டதை நாம் காண்கிறோம்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையும் , உரிமைப் போராட்டமும் உள்ளூர்ப் பிரச்சினைகள் என்றும், வெளிநாடுகள் தலையிடவோ, விமர்சனம் செய்யவோ கூடாது என்றும் கூறி வந்த இலங்கை அரசுகள் இப்போது தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக உலக நாடுகளின் தயவுகளை நாடிப் பரப்புரை செய்து வருவதை நாம் காண்கிறோம். இன்று உலக நாடுகள் சில தத்தம் நலன் சார்ந்து இலங்கை அர சுக்கு ஆதரவாக நடந்து கொண்டாலும், ஒரு விடயம் இப்போது தெளிவாக நிரூபணமாகி உள்ளது.

'இலங்கை அரசால் தமிழரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கமுடியாது. அந்தப் போராட்டத்தை தோற்கடிக்க முடியாது. அந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு இனிமேலும் அணைபோட முடியாது' என்ற உண்மை இன்று நிரூபிக்கப்பட்டு விட்டது. அதனால் தான் இன்று உலக நாடுகளிடம் இலங்கை அரசு கையேந்தி நிற்கிறது.

அதுமட்டுமல்லாது இலங்கை அரசு நேரடிப் போரில் மட்டுமல்லாது, தேய்மானப் போரிலும் (War of attrition) வெற்றி கொள்ள முடியாத நிலையில் தான் இன்று உள்ளது.

இலங்கை அரசு இன்று வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்பதுவும், சில வெளிநாடுகள் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதுவும் இன்னுமொரு யதார்த்தத்தையும் சுட்டிக் காட்டுகின்றன. தமிழீழ விடுதலைப் பேராட்டம் சரியான பாதையில் நகர்ந்து செல்வதைத் தான் இவை நிரூபணம் செய்திருக்கின்றன. இந்த விடுதலைப் போராட்டம் இன்னும் மிகக்குறுகிய காலத்துக்குள் மிகப் பெரிய பரிமாணத்தின் ஊடாக இறுதி இலட்சியத்தை அடைவதற்கான அறிகுறிகளை நாம் காண்கிறோம். இதற்கு உலக வரலாறும், போரியல் வரலாறும் சான்று பகர்கின்றன.

எம்மைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகவே கருதுகிறோம். இனியும் தொடர்ந்து பேசுவதில் உண்மையான பலன் எதுவும் கிட்டாது என்பதைத்தான் களநிலவரம் சுட்டிக் காட்டுகிறது. இலங்கை அரசிடமோ அல்லது சம்பந்தப்பட்ட உலக நாடுகளிடமோ உண்மையான, நேர்மையான மனமாற்றம் உடனடியாக வராவிட்டால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் சமாதி நிலையை அடைந்துவிடும்.

சம்பந்தப்பட்ட உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தேவையற்ற அழுத்தங்களை மேற்கொண்டு, தடைகளையும் விதித்து அதன் பின்னர் புலிகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பது என்பதானது மிகத்தவறான செயற்பாடாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்களும், தடைகளும் உண்மையில் தமிழ் மக்கள் மீது



மேற்கொள்ளப் படுகின்ற அழுத்தங்களேயாகும். சம உரிமையையும், நீதியையும், சமாதானத்தையும் வேண்டி நிற்கின்ற தமிழ் மக்கள் மீது பாரபட்சமான முறையில் உலக நாடுகள் நடந்து கொள்கின்ற இந்த முறைகள் உலக நாடுகளை இலங்கையின் தரத்துக்கும் கீழே தான் கொண்டு போய்விடும்.

உலக நாடுகளின் இந்தத் தவறான அணுகுமுறைகளால் உற்சாகம் கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவற்றைத் தனது பேரினவாத சிந்தனைக்கு ஆதரவாக பயன்படுத்துகிறார். தமிழ் மக்கள் மீது வலிந்து ஒரு போரைத் திணிப்பதற்கான சகல முயற்சிகளையும் மகிந்த இப்போது ஆரம்பித்து விட்டார். இந்தப் போருக்கான நேரடிப் பொறுப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பின்னணிப் பொறுப்பை சம்பந்தப்பட்ட உலக நாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை விரைவில் உருவாகும்.

நிரந்தர சமாதானம் குறித்து மேற்குலகம் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் இன்று பாரிய தோல்வியைக் கண்டுள்ளன. இந்தப் பாரிய தோல்விக்கு அடிப்படைக் காரணம் சிங்கள அரசுதான். ஆனால், இந்த உண்மையை மேற்குலகம் ஏற்றுக் கொள்வதாக இல்லை. காரணம் மேற்குலகம் தனது நலன் சார்ந்து, தனது பொருளாதார நலன் சார்ந்து, தனது பிராந்திய நலன் சார்ந்து செயற்படுவதால் சிங்கள அரசின் தவறுகளை மேற்குலகம் கண்டும் காணாதது போல் இருக்கிறது. இதன் காரணமாக மேற்குலகம் இன்று தனது இராஜதந்திரத்தில் பலத்த தோல்வியைத் தழுவியுள்ளது.

மேற்குலக நாடுகளின் அடிப்படை நோக்கில் மாற்றம் வராத வரையில் இலங்கை அரசிடம் மாற்றம் வராது. இனியும் வீணாக விடுதலைப் புலிகளைக் குற்றம் சொல்லி வருவதில் பிரயோசனம் எதுவும் இருக்காது.

மேற்குலக நாடுகளின் அடுத்தகட்ட நகர்வுகள் இலங்கை அரசுக்கு வெளிப்படையான அழுத்தங்களைத் தருவதாக அமைய வேண்டும். இது உடனடியாக மேற்கொள்ளப் பட வேண்டும். இவற்றைச் செய்வதற்கு மேற்குலக நாடுகள் தவறும் பட்சத்தில் பெரும்போர் ஒன்று வெடிக்கக்கூடும். அதற்கான சாத்தியமே இப்போது உள்ளது. பெரும் போர் ஒன்றைத் தொடங்குவதற்கான அடித்தளத்தை மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே போட்டு விட்டார் என்பதுதான் உண்மையுமாகும்.

இப்போது நிலவுவது சமாதானத்துக்கான காலம் அல்ல! போர்க் காலம்தான் தற்போது நிலவுகிறது! மென்தீவிர யுத்தம் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்வதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். ஆனால், இங்கே ஒரு விடயத்தை தர்க்கிப்பது பொருத்தமானதாக இருக்கக்கூடும். இலங்கை அரசானது ஒரு நீண்டகால நேரடிப் போரையோ அல்லது தேய்மானப்போர் ஒன்றையோ (War of Attrition) எதிர்த்துத் தாக்குப் பிடித்து நிற்க மாட்டாது.

போரியல் வரலாற்றில் - War of Attrition என்று அழைக்கப் படுகின்ற தேய்மானப் போரானது எதிரியைக் களைக்கப் பண்ணுகிற உத்திகளைக் கொண்டதாகும். The act of wearing away என்றும் இது பற்றி குறிப் பிடுவதுண்டு. தேய்மானப் போர் என்பதானது நேரடிப் போரின் போது மட்டுமல்லாது, நேரடிப் போர் ஒன்று நடந்து முடிந்த பின்னரும் ஆரம்பித்துத் தொடரக் கூடியதாகும். சமீபத்திய வரலாற்று உதாரணங்களாக இரண்டைச் சொல்லலாம். இஸ்ரேல் இராணுவமானது லெபனானை விட்டு வெளியேறுவதற்கு ஹிஸ்புல்லாவின் தேய்மானப் போர் தான் காரணமாக அமைந்தது. இன்று ஈராக்கில் போர் முடிந்து விட்டது. ஆனால், தேய்மானப் போர் தொடங்கி விட்டது. ஒரு கெரில்லா இயக்கமாக (கரந்தடி) உருவாகி இப்போது ஒரு மரபு வழி இராணுவமாகப் பரிமா ணம் பெற்றுள்ள விடுதலைப் புலிகளின் போர் உத்திகள் நவீன காலத்திலும் புதுமையானவை தான். விடுதலைப் போராட்டப் போரியல் வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒப்பீட்டளவில் தனித்துவமானதும் உயர்வானதுமாகும்.

இன்று கெரில்லாப் போரையும், தேய்மானப் போரையும், மரபு வழிப் போரையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்கு வலுவுள்ளது. இலங்கைத் தீவில் ஒரு நீண்ட போரோ அல்லது ஒரு தேய்மானப் போரோ நடைபெறு வதை மேற்குலகம் விரும்பாது என்ற காரணத்தால் தனது அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்குலகம் நேர்மையாக மேற்கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

இன்று சிங்கள அரசு தமிழ் மக்களைத் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்து வருகிறது. தொடர்ந்தும் கொல்லப்பட்டு வருகிற தமிழ் பொதுமக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரணம் தரவோ, ஆறுதல் சொல்லவோ இலங்கை அரசு தயாராக இல்லை. ஆனால், விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்துவதற்காக இலங்கை அரச ஆதரவில் நடத்தப்பட்ட கெப்பிற்றிக்கொல்லாவ தாக்குதலைப் பார்வையிட்டு ஆறுதலும், அனுசரணையும் வழங்குவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ உடனே சென்றார். ஏனென்றால், அந்தப் பொதுமக்கள் அப்பாவிகள் மட்டுமல்ல, சிங்களவர்களும் ஆவார்கள்.

இந்த நடவடிக்கை மூலம் சில உண்மைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள் இருக்கின்றன. இலங்கைத் தீவில் இரண்டு தேசிய இன மக்கள் இருக்கிறார்கள். இலங்கைத் தீவில் இரண்டு தலைமைகள் இருக்கின்றன. சிங்களத் தலைமைகளுக்குத் தமிழ் மக்களின் உரிமை குறித்தோ, சமாதானத் தீர்வு குறித்தோ, இயல்பு வாழ்க்கை குறித்தோ கொஞ்சமும் கவலை கிடையாது - என்ற உண்மைகள் இப்போது வெளிப்படையாகவே தெளிவாகி விட்டன.

எந்தச் சிங்களத் தலைமையும், தமிழ்ப் பொதுமக்களுக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத் தீர்வைத் தந்ததுமில்லை, இனியும் தரப்போவதுமில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவின் முன்னோடியான சந்திரிகா அம்மையார் கூட்டாட்சி என்று அன்று சொன்னார். ஜனாதிபதி ராஜபக்ஷவோ இப்போது ஒற்றையாட்சி என்கிறார். முன்னொரு தடவை சந்திரிகா அம்மையார் UNION ஆட்சி என்ற பதத்தை பாவித்தபோது, ஐக்கிய தேசியக் கட்சி அந்தத் திட்டத்தை நாடாளுமன்றத்திலேயே எரித்தது. அந்த எதிர்ப்புக்கு மகிந்தவும் ஆதரவு நல்கினார். ஆனால், இன்று அமைச்சர் மங்கள சமரவீர சொல்கிறார் - அந்தத் திட்டத்தை எரித்தது புலிகள்தான் என்று. புத்தர் பெருமானின் பல்லுக்குக் கொடுக்கிற மரியாதையை அவருடைய சொல்லுக்குக் கொடுப்பதில்லை இவர்கள்.

இலங்கை அரசானது சமாதானப் பேச்சுகளை இழுத்தடித்தது, ஒப்பந்தங்களை மீறி, சமாதானத்தைச் சீர்குலைத்தது மட்டு மன்றி, இப்போது தமிழ் மக்கள் மீது யுத்தம் ஒன்றையும் ஆரம்பித்துவிட்டது. சிங்கள அரசு விரைவில் ஓர் ஆப்பிழுத்த குரங்காக ஆவதற்கு முன்னால் மேற்குலகம் நடுநிலையோடு இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும். சிங்களப் பேரினவாத அரசுகளின் இழி நிலைக்கு ஒப்பாக மேற்குலகமும் தரம் இறங்கிவிடக்கூடாது என்பது தான் எமது இன்றைய எதிர்பார்ப்பாகும்.

**சபேசன்**

நன்றி - இணையத்தளம்

# படுகொலைகளுக்கு காரணமான படையினரை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது!

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்—

வடகிழக்கில் அப்பாவிப் பொதுமக்கள் கோரமாக படுகொலை செய்யப்பட்டு வரும் சம்பவங்களுக்கு காரணமாக இருக்கும் படையினரை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

வடகிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுவரும் சம்பவங்களைக் கண்டித்தும், தற்போது அப்பாவி மக்கள் படையினரால் அனுபவித்து வரும் துன்பங்களை வெளிப்படுத்தியும் நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலான கொடூரமான யுத்தத்தால் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல லட்சக் கணக்கான தமிழ்மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். கணிசமான எண்ணிக்கையானவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

யுத்தம் மற்றும் கடல்கோள் ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களை மீளக்குடியமர்த்தவும், புனர்வாழ்வளிக்கவும், அழிந்து போன சொத்துக்களை புனர்நிர்மாணம் செய்யவும் அரசாங்கம் திருப்திகரமான ஒழுங்குகளை மேற்கொள்ளவில்லை. கிடைக்கப்பெற்ற உதவிகளும் நிவாரணங்களும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அரசசார்பற்ற தன்னார்வ அமைப்புக்களும் வழங்கியவையே.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை ஒன்றை நிறுவுவதன் மூலம், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவும், புனர்வாழ்வளிக்கவும் வடக்குக் கிழக்கு பிராந்தியத்தை மீள் நிர்மாணம் செய்யவும் எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. கடல்கோள் நிவாரண கட்டமைப்பு முயற்சியும் சிதைக்கப்பட்டது.

இவையெல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், தமிழ் பேசும் மக்கள் கஷ்டப்படுகின்றனர். கணிசமான தமிழ் பேசும் மக்கள் அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே, மீண்டும் கணிசமான தமிழ்மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், சொந்த வீடுகள், கிராமங்களிலிருந்து பாதுகாப்புத்தேடி ஓடுகின்ற நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர். 3000க்கும் அதிகமான தமிழ் மக்கள் இந்தியாவுக்குத் தப்பி ஓடியுள்ளனர்.

இந்தநிலை வேகமாக மோசமடைந்து வருகிறது. இந்தநிலை மேலும் மோசமடையாது தடுப்பது அவசியமாகிறது.

மன்னார் - வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கோரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வன்செயல் காரணமாக முன்பு இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த இந்தக் குடும்பம், போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், ஒன்றரை ஆண்டுகள் கழித்து சொந்த ஊருக்குத் திரும்பியிருந்தது. கொடூரச் சம்பவம் இடம்பெற்றிருந்த இடத்தில் திரண்டிருந்த வங்காலை மக்கள் படையினர்தான் இந்தக் கொடூரத்தைப் புரிந்தனர் என்று ஆக்ரோசமாகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்தினர். மன்னார் மறைமாவட்ட பேராயர் அதிவண ராயப்பு யோசெப்பும் இதனை உறுதிப்படுத்தினார். வங்காலை மக்கள் பயங்கரமாக அச்சுறுத்தப்பட்டுள்ளனர், அச்சத்தில் வாழ்கின்றனர்.

பேசாலை வெற்றிநாயகி மாதா தேவாலயத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். கடலில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலையடுத்து இது இடம்பெற்றது.

திடீரென, மக்களால் கடற்படையினர் என அடையாளம் காணப்பட்ட அரைக்காற்சட்டை அணிந்த சிலர் தேவாலயத்தினுள் பிரவேசித்து, யன்னல் ஊடாக கிரனேட் குண்டுகளை வீசியும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். ஒரு பெண் கொல்லப்பட்டதுடன். 47 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களை மக்களால் அடையாளம் காணமுடிந்தது.

அதேதினம் -வங்காலைபாட்டுக்கும் பேசாலைக்குமிடையில் தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான நூற்றுக்கு அதிகமான மீன்வாடிகளும், 50க்கும் அதிகமான கண்ணாடி இழைப் படகுகளும் தீக்கிரையாக்கப் பட்டன.

இதேபோன்று - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுட்டும், கிளைமோர் தாக்குதல்களிலும் பலர் கொல்லப்பட்டனர்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகளிலிருந்து கதவுகள், யன்னல்கள் மற்றும் பல பொருட்களை துணைப் படையினர் அகற்றிச் செல்கின்றனர். முன்பு இடம்பெற்ற வன்செயல்களின் போதும் இவ்வாறாக நடந்தது.

தமிழ்மக்கள் மீண்டும் திரும்பி வந்து தங்களின் இடங்களில் குடியமர்வதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்பது தெளிவாகிறது.

படையினரும் துணைப்படையினரும் மிகப்பெரிய அளவில் தண்டனைக்குட்படுத்தப்படாத சுதந்திரத்துடன் செயல்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

தற்போதைய நிலை தொடருமானால் தமிழ் பொதுமக்களின் தற்போதைய நெருக்கடி நிலை மேலும் மோசமடையும்.

படையினரையும், துணைப் படையினரையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

தற்போது இடம்பெற்றுவரும் துன்புறுத்தல், அச்சுறுத்தல், பாலியல் வல்லுறவு, அழிவு மற்றும் கொலைகளுக்கும் தொடர்ந்தும் தாங்கள் உட்பத்தப்படாமல் தங்களின் வீடு மற்றும் கிராமங்களில் வாழ்வதற்கு தமிழ் பொதுமக்கள் உரித்துடையவர்கள்.

தமிழ் பொதுமக்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கான தனது சட்டபூர்வ கடமையிலிருந்து இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்பதை நாம் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

தமிழ் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தனக்குரிய கடப்பாட்டை நிறைவேற்றும்படி, அரசாங்கத்தை சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்க வேண்டும்.

தற்போது காணப்படும் படையினர் தண்டனைக்குட்படுத்தப்படாத சுதந்திரத்துடன் செயற்படும்- கடிவாளமிடப்படாத சூழ்நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இவ்வாறு கூட்டமைப்பு நடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# காவலரண், மினிமுகாம் அமைப்பதில் வடமராட்சியில் படையினர் தீவிரம்!

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கு மற்றும் பருத்தித்துறை கிழக்கு கரையோரப் பகுதிகளில் இராணுவத்தினர் புதிய காவலரண்கள் மற்றும் மினி முகாம்களை அமைக்கும் பணியில் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் - நாகர் கோவில் முதல் மணற்காடு வரையான கரையோரப்பகுதிகளிலும், பருத்தித்துறை வல்லிபுரம், கற்கோவளம், தும்பளை ஆகிய கரையோரப் பகுதிகளிலும் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நிலைகளை பலப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் புதிதாக காவலரண்களையும், அதற்கான விநியோக மினி முகாம்களையும் அமைத்து வருகின்றனர்.

நேற்றுக் காலை சுமார் பத்துக்கு மேற்பட்ட கவச வாகனங்களில் அழைத்து வரப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கற்கோவளம், தும்பளை மற்றும் வல்லிபுரம் ஆகிய பகுதிகளில் குவிக்கப்பட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், முன்னணிக் காவலரண்களை நோக்கி கடந்த வாரம் முதல் பெருமளவு இராணுவ தளபாடங்களும் இராணுவத்தினரும் முன்னணிக் காவலரண் பகுதிகளில் குவிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

முன்னணிப் பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினரைக் குவித்து இராணுவ தளபாடங்களையும் எடுத்துச் செல்வதனால் அந்தப் பகுதி மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளதுடன், சில குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (12)

# நயினை நாகபூசணி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

நெடுந்தீவு—

நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26ம் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 11ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை - 30ம்திகதி வெள்ளிக்கிழமை இரவு முத்துச்சப்பறமும், அடுத்த மாதம் 2ம் திகதி இரவு ஞாயிற்றுக்கிழமை கயிலைக்காட்சியும், 4ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதுடன், மறுநாள் புதன்கிழமை பகல் சிவபூசை கயிலைக்காட்சியும் இரவு திருமஞ்சமும் இடம்பெறவுள்ளது.

6ஆம் திகதி வியாழக்கிழமை பகல் கருடசர்ப்ப விசேடபூசையும், வாறபட்சரி நாகம் வீதியுலாவும், இரவு பூந்தண்டிகையும், சனிக்கிழமை பகல் கயிலைக்காட்சியும், இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

9ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நயினை அம்மனின் தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும், இரவு திருவூஞ்சல் மற்றும் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை - வருடாந்த மஹோற்சவத்தின் இறுதித் திருவிழா 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு எந்த ஆலயத்திலும் இல்லாத வகையில் மிகவும் சிறப்பாகவும், வனப்புமிக்கதுவுமான தெப்பத்திருவிழா இடம்பெறவுள்ளது.

வருடாந்த திருவிழாவுக்கென வரும் பக்தர்களது நலன்கருதி வழமைபோன்று சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

(113)

# தையல் கூலி கோரிய பின்பே கொடுப்பனவு வழங்கப்படும்

## பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

வலி. மேற்கு பிரதேச சபையால் சீருடை பெற்ற ஊழியர்களில் ஐம்பது வீதமானோரின் சீருடை கொடுப்பனவுக்கான தையல் கூலிக்கான கோரிக்கை கிடைத்ததும் அவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நமது ஈழநாடு பத்திரிகையில் வெளியான செய்திக்கு விளக்கமளித்து அனுப்பிய செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

19.06.2006 ஆம் திகதிய பத்திரிகையில் நிர்வாகத்தின் செயலில் ஊழியர்கள் விசனம் தெரிவிப்பு என்ற தலைப்பின் கீழ் செய்தி வெளிவந்தது.

இதில் சீருடைத்துணிகள் வழங்கப்பட்ட போதிலும், தையல் கூலி வழங்கப்படவில்லை என தகவல் வெளியானது.

உள்ளூராட்சி மன்றத்தில் கடமை புரியும் ஊழியர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்பட்ட பின்னர் ஊழியர்கள் சீருடைகளைத் தைத்த பின் அதற்கான தையல்கூலியை கோருவது வழமை.

எமது பிரதேசசபையில் 2005 ஆம் ஆண்டு மொத்தம் 45 ஊழியர்களுக்கு சீருடைத்துணிகள் வழங்கப் பட்டன.

இதில் 05 ஊழியர்கள் மட்டுமே இன்று வரையில் தையல் கூலிக்கான சிட்டையை சமர்ப்பித்து கோரிக்கை விடுத்துள்ளனர். ஆகக்குறைந்தது 50% வீதமானோரின் கோரிக்கை கிடைக்கப்பெற்றதும் கொடுப்பனவு வழங்குவது சபையின் உறுதிப்பாடாகும்.

மேலும், மாதாந்தம் வழங்கப் படும் எழுது பொருட்கள் எதுவும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் - இது அடிப்படை உரிமை மீறல் என்றும் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

எழுதுபொருட்கள் வழங்காமை அடிப்படை உரிமை மீறல் அல்ல என்பதையும் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் படுகாயம்!



யாழ்ப்பாணம்

அச்சுவேலி - இடைக்காட்டுப் பகுதியில் வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இடைக்காட்டைச் சேர்ந்த செல்லையா நடராசா (வயது 63) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ் . போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் - நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் இவரது வீட்டுக்கு சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாக தெரியவருகிறது.


## முகாமைத்துவக் கல்லூரி

## இடமாற்றம்

ஜெயந்திநகர் கிளிநொச்சியில் இயங்கிவந்த முகாமைத்துவக் கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி கிளிநொச்சி கரடிப்போக்கு சென். திரேசா மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 24.06.2006 தொடக்கம் இயங்கவுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

## A.A.T. கற்கைநெறி தமிழ்மொழி மூலம்

2006 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி A.A.T. கற்கை நெறிக்கான பதிவுகள் 30.06.2006 வரை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருவதோடு, இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத அனைவரும் முகாமைத்துவக் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இணைப்பாளர்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்குச்சந்தி,
கிளிநொச்சி.

(சி/4477)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படையினர் ஷெல் தாக்குதல் பொதுமக்கள் இடம்பெயர்வு

மன்னார்—

மன்னார் - தாழ்வுபாடு கடற்பரப்பில் நேற்றுப் பகல் 1.30மணியளவில் கடற்படையினரால் 10க்கும் மேற்பட்ட மோட்டார் ஷெல்கள் ஏவி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாழ்வுபாடு கடற்கரையிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலால் தாழ்வுபாடு மக்கள் அச்சமடைந்து புனித வளனார் ஆலயத்திலும், பாடசாலையிலும் மற்றும் பெரிய கல் வீடுகளிலும் கூட்டம் கூட்டமாக சேர்ந்து பாதுகாப்புக்கருதி தஞ்சமடைந்தனர்.

எனினும், கடலில் எதுவித விபரீதமும் நடைபெறவில்லை என்பது உறுதியான பின்னர் மீண்டும் வீடுகளுக்குச் சென்றனர்.

பேசாலை அசம்பாவிதங்களுக்குப் பிறகு மீனவர்கள் எவரும் மன்னார் பகுதியில் கடலில் மீன்பிடிக்கச் செல்லவில்லை. அவ்வாறு இன்னும் மீனவர்களின் படகுகள் கடலில் செல்லாததால் தாழ்வுபாடு கடற்பரப்பில் தெரிந்த படகு விடுதலைப்புலிகளுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே கடற்படையினரால் ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இதிலிருந்து அந்தப் படகு தப்பிவிட்டதால் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வங்காலைப்பாடு பகுதியில் எரியூட்டப்பட்ட படகுகளிலிருந்து எஞ்சிய படகுகளை வங்காலைப்பாடு மீனவர்கள் கட்டம் கட்டமாக தமது ஊரான வங்காலைக்கு எடுத்து வருகின்றனர்.

## அரசு - புலிகளுக்கான...

புலிகள் பதில் அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதத்துக்கான பதில் - நோர்வே நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் ஜூன் 29 இல் வெளியிடப்படும்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை அனுசரணையாளர்கள் என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்கின்ற போதும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையைக் காரணம் காட்டி அந்த நாடுகளின் பிரதிநிதிகளை கண்காணிப்பில் ஈடுபட வேண்டாம் எனக் கோரியிருப்பது கவலைக்குரியதுதான்.

தடைசெய்த நாடுகளின் அங்கத்தவர்கள் நடுநிலைமையுடன் செயற்பட வாய்ப்பில்லை என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்.

தடைசெய்த பின்னர் உறவை முன்போன்று பேணலாம் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராக இல்லை.

சர்வதேச கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பணியை பொறுப்புணர்வுடன் செய்ததாகவே நாம் கருதுகிறோம். ஐந்து நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளும் கடந்த நான்கரை வருடங்களாக மிகச் சிறப்பாக தங்கள் பணியை புரிந்துள்ள போதும் ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னர் அவர்களது பணி நடுநிலைமையுடையதாக இருக்குமென விடுதலைப்புலிகள் கருதவில்லை.

இருப்பினும், இது எமக்குகவலையளிக்கும் ஒரு விடயம் தான்.

கொழும்பு திரும்பிய பின்னர் அரச தரப்பினரைச் சந்திக்கவுள்ளதுடன் அவர்களது பதில் தொடர்பாக விவாதிக்கவுள்ளேன். இரு தரப்பினருக்குமான பதில் ஜூன் 29 இல் வெளியாகும்.

விடுதலைப்புலிகளின் இந்தக் கருத்துக்களால் ,உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது. தொடர்ந்தும் தங்கள் பாதுகாப்பை கண்காணிப்புக் குழுவினருக்கு வழங்க விடுதலைப் புலிகள் பூரண சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்திருக்கும் வன்முறைகளைச் சுட்டிக்காட்டிய பிரட்ஸ்கர் - பொதுமக்கள் மீதான பல்வேறு தாக்குதல்கள், கெப்பிட்டிக்கொல்லாவ, பேசாலை தாக்குதல்கள் மற்றும் விமானப் படையினரின் விமானக் குண்டுத் தாக்குதல்கள் அனைத்தும் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதையே காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

## கலிகையில்....

கொண்டு செல்லப்பட்டனர்.

கடுமையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான இராணுவச் சிப்பாய் ஒருவர் அங்கு மரணமானதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்தின. ஏனைய இருவரும் ஆபத்தான நிலையிலுள்ளனர்.

## வடகிழக்கில்...

ரத்னதேரர் ஆட்சேபனை தெரிவித்தார். இராணுவத்தாலும், துணை இராணுவக் குழுக்களாலும் என்ற வார்த்தையை நீக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஆனால், தமிழ் மக்கள் படுகொலைக்கு இராணுவமும், துணை இராணுவக் குழுக்களுமே காரணம் என்று சம்பந்தன் வாதிட்டார். அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் ஒரு நிமிட நேர இரங்கல் தெரிவிக்கப்படும் என்றார்.

இதையடுத்து, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு நிமிடம் எழுந்து நின்று இரங்கல் தெரிவித்தனர்.

## இளைஞன்...

நபர்களால் நேற்று முன்தினம் பிற்பகல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரது சடலம் மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திராய்மடுவிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது ஊரணி இராணுவ முகாம் அருகே அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வர்த்தகர்....

செய்திகள் தெரிவித்தன.

நான்கு குழந்தைகளின் தந்தையான நிர்மலகுமாரன் மதுபான சாலை விடுதியை கொம்மாந்துறையில் நடத்தி வந்தார். வந்தாறுமூலை-கிழக்குப் பல்கலைக்கழகம் அருகே பல ஆண்டுகளாக இந்த விடுதியை அவர் நடத்தி வந்தார்.

நிர்மலகுமாரனின் தலையிலும் மார்பிலும் 3முறை 9மி.மீ கைத்துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது. சுட்டுக் கொல்லப்பட்ட நிர்மலகுமாரனின் உடல் ஏறாவூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

## தடுப்புக் காவலிலுள்ள இளைஞரை சந்திப்பு!

யாழ்ப்பாணம்—

அண்மையில் கொடிகாமத்தில் கைதுசெய்யப்பட்டு காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் பார்வையிட்டனர்.

அண்மையில் கொடிகாமம் நகர்ப்பகுதியில் கிளைமோர் குண்டு வைத்திருந்ததாகக் கூறி காளிகோவிலடி கொடிகாமத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மயூரன் (வயது 25) என்பவரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

மேலும், மக்களின் கடும் எதிர்ப்பையடுத்து குறித்த இளைஞரை கொடிகாமம் பொலீஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்தனர். பொலிஸார் மூலம் அவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக சட்டத்தரணி மு.ரெமிடியஸ் மற்றும் குழுவினர் காங்கேசன்துறைக்கு விஜயம் செய்து குறித்த இளைஞரை பார்வையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# இனிமேல் நடைபெறும் தாக்குதல்கள்...

கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில்: நோர்வே அனுசரணையாளர்களை வழமையாக சந்திக்கின்ற சந்திப்பாகவே இது அமைந்தது. முக்கியமாக, ஒஸ்லோ சந்திப்புக்களுக்கு பின்னரான சந்திப்பு என்ற வகையிலும் - அரசும், அரச படைகளினதும் படுகொலைகளும், வன்முறைகளும் அதிகரித்துள்ள நிலையில் நாம் நோர்வே அனுசரணையாளர்களை சந்தித்தது என்ற வகையில் இந்தச் சந்திப்பு முக்கியம் பெறுகிறது.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு எமது நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகவும், உறுதியாகவும் தெரிவித்துள்ளோம். அரசாங்கம் தொடர்ந்து தமிழ் மக்களைப் படுகொலை செய்து கொண்டிருப்பதும், எமது பிரதேசம் மீதும், எமது மக்கள் மீதும் விமானப் படை குண்டுவீச்சுக்களையும், ஆட்லறித் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி எமது மக்களை படுகொலை செய்வதும், எமது மக்கள் காணாமல் போவதும், மக்கள் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் போன்ற நடவடிக்கைகள்- ஒரு பிரகடனப்படுத்தாத யுத்தத்தை எமது பிரதேசம் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதையே சுட்டிக்காட்டுகிறது என்பதையும், நாம் அரசின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு பொறுமை காத்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும் உறுதியாகத் தெரிவித்துள்ளோம்.

கேள்வி: நோர்வே என்ன பதிலை கூறுவதாக தெரிவித்தது?

பதில்: நோர்வேத் தரப்பு இன்று (நேற்று) அல்லது நாளை (நாளை மறுதினம்) அரச தரப்பை சந்தித்து எங்களுடைய நிலைப்பாட்டை தெரியப்படுத்துவதாகக் கூறியுள்ளனர்.

கேள்வி: நோர்வேத் தரப்புக்கு ஐந்து கேள்விகளுக்கான பதில் விடுதலைப்புலிகளால் எந்த வகையில் அனுப்பப்பட்டது?

பதில்: எமது சமாதானச் செயலகம் ஊடாக நோர்வேக்கு பதிலை அனுப்பியுள்ளோம். நேர்வேயின் கேள்விகளுக்கான ஒட்டு மொத்தமான பதிலை தெரிவித்துள்ளோம். அதாவது, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இடம்பெறுவது தொடர்பான கால அவகாசத்தை கேட்டிருந்தார்கள்.

நாம் நீண்டகால அவகாசத்தை கொடுப்பதிலுள்ள சங்கடமான நிலைமைகள் பற்றியும், போர்நிறுத்த உடன்படிக்கையை நூறு வீதம் கடைப்பிடிக்கின்ற தன்மையை அரசு காட்டுகின்றபோது தான்- போர் நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டு செல்ல முடியும் என்பது பற்றிய விளக்கங்களை பதிலில் தெரிவித்துள்ளோம்.

கேள்வி:நோர்வேக்கு அனுப்பிய பதில்கள் தொடர்பாக இன்று ஏதாவது ஆராயப்பட்டதா?

பதில்: நாம் அனுப்பியபதில்கள் தொடர்பான விளக்கங்களை எம்மிடம் கோரினார்கள். நாம் தெளிவாக விரிவாக விளக்கியுள்ளோம்.

கேள்வி: போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கு பற்ற முடியாது என நீங்கள் தெரிவித்ததாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளாரே?

பதில்: ஐரோப்பியஒன்றியம் தடை அறிவிப்பை வெளியிட்டது என்பது நடுநிலைமையை, சமதரப்பு என்கின்ற கோட்பாட்டை, நிலைப்பாட்டை பலவீனப்படுத்தியிருக்கின்றது. போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படுகின்றபோது எமது தலைமைப்பீடம் மிகவும் உறுதியான நிலைப்பாட்டை தெரிவித்திருந்தது. நோர்வேத் தரப்போடு உடன்பாடு கூட காணப்பட்டது.

அதாவது, கண்காணிப்புப் பணியை மேற்கொள்கின்ற நாடுகள் இரண்டு தரப்பையும் சமத்துவமாகவும், சமதரப்பாகவும், நடுநிலைமையோடும் ஏற்றுக் கொண்ட நாடுகளாக அமைய வேண்டும் என்பது இணக்கப்பாடு காணப்பட்ட விடயம்.

துரதிஷ்டவசமாக ஐரோப்பிய யூனியன் தடை அறிவிப்பை செய்தது என்பது - போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் அதன் செயற்பாட்டுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பது நாம் ஏற்கனவே கண்ட இணக்கப்பாடு. அதன் அடிப்படையில்தான் நாம் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறோம்.

ஐரோப்பிய நாடுகள் இந்தப் பணியைச் செய்கின்ற போது போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துகின்ற, கண்காணிக்கின்ற கண்காணிப்பாளர்கள் நடுநிலைமை தவறிய ஒரு நிலைதான் இருக்கும். எங்கள் மக்களோ நாங்களோ அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமும்,கண்காணிப்பும் பலவீனமாகப் போகும். ஒரு பக்கச் சார்பாகவும் போகும். அந்த நிலையில் நோர்வே தரப்புக்கு இதன் முக்கியத்துவங்களையும், நிலைமைகளையும் நாங்கள் வெளிப்படுத்தி விரைவாக மாற்றங்களை செய்து ஒழுங்குபடுத்த முடியுமாக இருந்தால் ஒழுங்குபடுத்தும்படியும் தெரிவித்திருக்கிறோம்.

கேள்வி: மாற்றம் செய்வது தொடர்பாக நோர்வே கொள்கையளவில் ஏற்றுள்ளதா?

பதில்: ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் நோர்வேக்கு உள்ளது. ஏனெனில், தடை அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் செய்துவிட்டது. போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை இணக்கப்பாடே பலவீனப்பட்டிருக்கிறது. அதை நோர்வே ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாது.

கேள்வி: விமானப்படையின் விமானத் தாக்குதல்கள் தொடர்பாக ஹான்ஸ்பிரட்ஸ்கரடம் கருத்துக்கள் எதுவும் தெரிவித்தீர்களா?

பதில்: விமானத் தாக்குதல், பீரங்கித் தாக்குதல்களை படைகள் தொடர்ந்து எமது பிரதேசங்கள் மீது நடத்திய வண்ணமே உள்ளது. இவை பாரதூரமான போர்நிறுத்த மீறல்கள். இது ஒரு யுத்த பிரகடனமே என்று உணர்கின்றோம் என்பதையும் நோர்வேத் தரப்புக்கு சுட்டிக் காட்டி, தொடர்ந்து தாக்குதல்கள் இடம் பெறுமாக இருந்தால் எம்மீது தொடுக்கப்பட்ட போராகக் கருதி நாமும் பதில் தாக்குதலை நடத்தவேண்டி வரும் என்பதையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

கேள்வி: தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் பல ஈழத்தமிழர்களுக்காக குரல் எழுப்பி வருகின்றன. தற்போதைய நிலையில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

பதில்: அரசாங்கம் காடைத்தனமான, வெறித்தனமான இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற நிலையில்- தமிழர் தாயகத்தில் எமது மக்கள் படுகொலை செய்யப்படுகின்றபோது, தமிழகத்தில் வாழ்கின்ற எமது மக்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கும், கொந்தளிப்பான நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எங்களுடைய மக்கள் ஒன்றுபட்டு அரசாங்கத்தின் இனப்படுகொலைக்கு எதிராக தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்திய அரசும் தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து அரசாங்கத்தின் இனப்படுகொலைகளுக்கும், யுத்த முன்னெடுப்புகளுக்கும் தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டியது இந்திய அரசினுடைய பொறுப்பாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

இலங்கைஅரசின் அடாவடித்தனங்களை இந்திய அரசாங்கம் கண்டித்துதமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்து, தார்மீக ஆதரவை வெளிப்படுத்த வேண்டுமென்பது தான் தமிழ் மக்களுடைய விருப்பம். அதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.

கேள்வி: மங்கள சமரவீர இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அவரது பயணம் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கமாக அமையுமா?

பதில்: அப்படியும் கருதலாம், சிங்களத் தலைவர்கள் எப்போதாவது பயணத்தை மேற்கொள்கிறார்கள் என்றால் தமிழர்களுடைய அரசியல், இராணுவ முன்னெடுப்புக்கள், போராட்ட முன்னெடுப்புக்களை குழப்புவது தான் நோக்கமாக இருக்கும். இது வழமையானது. வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பயணம் மேற்கொண்டு இருக்கிறார் என்றால் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளச் செல்கின்றார் என்றே நாம் பார்க்கலாம்.

இந்தப்பயணம் எவ்வளவு வெற்றியளிக்கிறதோ இல்லையோ என்பதை விட சர்வதேச சமூகத்தை பிழையாக திசை திருப்பிக் கொண்டு செல்வதற்கு அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள படுகொலைகளை மூடி மறைத்து, தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்தவும் இந்தப்பயணங்களை சிங்களத் தலைவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றுதான் தமிழர் தரப்பால் எண்ணப்படுகிறது.

கேள்வி: தமிழர் தாயகத்தில் அரச படைகளின் ஆழஊடுருவும் படையணியின் தாக்குதல்களை அரசு மறுத்து வருகிறது. ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளும், மக்களும் இணைந்து முறியடித்து வருகின்றனரே அரசின் மறுப்பு தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதா?

பதில்: இந்த நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பில் சுட்டிக் காட்டினோம். அதாவது, ஆழ ஊடுருவும் அணியின் செயற்பாடுகள் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள், இராணுவத்தின் படுகொலை முயற்சிகள், பேசாலை, அல்லைப்பிட்டி உட்பட பல இடங்களில் எமது மக்கள், குழந்தைகள் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகவும், முழுக்க முழுக்கவே அரச படைத்தரப்பும், புலனாய்வுத்துறையும் இணைந்து செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எமது மக்களிடம் உள்ளன.

அரசின் வெளிப்படையான மனித உரிமை மீறல் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

கேள்வி: பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்று இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான சந்திப்புக்கள் பயன் தருமென கருதுகிறீர்களா?

பதில்: சர்வதேச உறவுகள், தொடர்புகளை நாம் துண்டிக்க முடியாது. அனுசரணையாளர்கள் என்ற வகையில் எங்களுடன் பேசுவார்கள், கருத்துக்களை பரிமாறிக்கொள்வார்கள். இது வழமையான நடவடிக்கை. இந்த நடவடிக்கை தொடரும். இதில் முன்னேற்றம், முன்னேற்றமின்மை என்பது தரப்புக்களைப் பொறுத்தது.

அரசு இதை மதிக்காமல், ஏற்றுக் கொள்ளாமல் போர்நிறுத்த உடன்பாட்டையோ, அமைதி முயற்சியையோ சீர்குலைத்து படுகொலைகளையும், ஒரு குழப்பகரமான சூழலையும் உருவாக்க வேண்டும்- ஒரு யுத்தத்தை நிகழ்த்த வேண்டும் என்ற நிலையில் செயற்படும் போது இந்தச் சந்திப்புக்கள் எந்தப் பயன்களையும் தராது. அரசின் போக்கிலேயே எல்லாம் உள்ளன.

கேள்வி: நோர்வேயின் ஐந்து கேள்விகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் அனுப்பப்பட்ட பதிலுக்கு யார் கையொப்பமிட்டார்கள்?

பதில்: தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர்சி.புலித்தேவன்கையொப்பமிட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.